# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 7 சனிக்கிழமை (20-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:54


## யுத்தநிறுத்தம், பேச்சு இரண்டையும் வலியுறுத்தி

# மட்டக்களப்பில் இன்று ஏற்பாடாகியுள்ள

# ஹர்த்தாலுக்கு படையினர் தடை விதிப்பு!

## ஆனால் திட்டமிட்டபடி நடக்கும் என்கிறது மாணவர் முன்னணி

மட்டக்களப்பு,ஜனவரி20

**அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதத்தில் மட்டக் களப்பில் இன்று ஏற்பாடாகியிருக்கும் ஹர்த்தாலுக்கு படைத் தரப்பு தடை விதித்திருக்கின்றது.**

**எனினும் இந்தக் ஹர்த்தால் திட்டமிட்டபடி இன்று நடைபெறும் என அதற்கு அழைப்பு விடுத்துள்ள சுதந்திர மாணவர் முன்னணி என்ற அமைப்பு அறிவித்துள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.**

இந்தக் ஹர்த்தாலைத் தடை செய்து, மட்டக்களப்பு நகரில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் 233 ஆவது பிரிகேட் படைப்பிரிவு பத்திரிகைச் செய்தி ஒன்றை நேற்று வெளியிட்டது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கோரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தகைய ஹர்த்தால்களிலும் வெகுஜனப் போராட்டங்களிலும் விடுதலைப் புலிகள் பின்னணியில் நிற்கின்றனர்.

பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியின்றி முன்னெடுக்கப்படும் ஹர்த்தால்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை கடைகளை மூடுவதோ, போக்குவரத்துச் சேவைகளை நிறுத்துவதோ ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

எனவே இந்தக் ஹர்த்தால்களுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. அத்துடன் ஹர்த்தால் சட்டவிரோதமானது.

பேச்சுவார்த்தைக்கும் யுத்தநிறுத்தத்துக்கும் இத்தகைய ஹர்த்தால்கள் தேவையில்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசாங்

(16ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. ஹர்த்தாலை ஆதரித்து

## கறுப்புப் பட்டியை அணிந்து கறுப்புக் கொடி பறக்க விடுக!

### யாழ்.பல்கலை மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.20

இன்று மட்டக்களப்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க குடாநாட்டு மக்கள் கறுப்புப் பட்டி அணிந்து தமது கடமைகளைச் செய்ய வேண்டும் என்றும் -

வர்த்தகர்கள் தமது வர்த்தக நிறுவனங்களுக்கு முன்பாக கறுப்புக் கொடியைப் பறக்கவிட வேண்டும் என்றும் -

ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-3)

## பேச்சுக்கான அடிப்படை நிரலை அரசுக்கு புலிகள் தர வேண்டும்

### அதற்குக் காத்திருக்கின்றாராம் ஜனாதிபதி

கொழும்பு,ஜன.20

*சமாதானப் பேச்சுவார்த்தையின்* அம்சங்கள் எந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்ற நிரலை விடுதலைப்புலிகள் அனுப்ப வேண்டும். அதனை அரசு எதிர்பார்த்திருக்கின்றது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சமயம் *அதில் பேசுகையில் ஜனாதிபதி இத்* தகவலை வெளியிட்டார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வே எடுத்துள்ள முன்முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி அங்கு விளக்கிக் கூறியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக ஜே.வி.பி. களுத்துறையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.20

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் நோர்வே அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் -

அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை உயர்வைக் கண்டித்தும் -

ஜே.வி.பி. அமைப்பு நேற்று களுத்துறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

களுத்துறை நகரில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கான ஜே.வி.பியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை - எதிர்வரும் 23 ஆம் திகதி இரத்தினபுரியிலும் இதே போன்றவொரு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஜே.வி.பி. நடத்த உள்ளது.

### 'பொங்கு தமிழ்' தொடர்கின்றது

யாழ்ப்பாணம்,ஜன.20

சமாதானம் மற்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் நடத்தி வரும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நேற்று 22ஆவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றன எனவும் -

நேற்றைய தினம் எழுச்சி தினம் குறித்த கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் யாழ். பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டன எனவும்-

அவை தொடர்ந்து இடம் பெறும் எனவும்-

பல்கலைக்கழக சமூகம் அறிவித்துள்ளது. (உ-7)

### நிமலராஜனின் படத்துடன் சுவரொட்டி

கொழும்பு, ஜன.20

படுகொலை செய்யப்பட்ட யாழ். பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் மூன்றாம் மாத நினைவு தினமான நேற்று நிமலராஜனின் உருவப்படம் பொறித்த சுவரொட்டிகள் கொழும்பு நகரின் முக்கிய பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் நிமலராஜனின் மறைவு குறித்த நினைவஞ்சலிக் கூட்டம்ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (உ-7)

### எழுதுமட்டுவாழில்

## படையினர் மீது தொடர்ந்து புலிகள் ஆட்லறி தாக்குதல்

கொழும்பு,ஜன.20

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் படையினர் புதிதாகக் கைப்பற்றியுள்ள பொன்னர் மற்றும் ஆவரங்காடு முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் ஓர் அதிகாரியும் ஆறு படையினரும் காயமடைந்தனர் என்றும் -

கிளாலி முன்னரங்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஏழு படையினர் காயம் அடைந்தனர் என்றும்-தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

காயமடைந்த படையினர் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

எழுதுமட்டுவாழில் விடுதலைப் புலிகளின் கிரனேட் தாக்குதலில் நான்கு படையினர் காயமடைந்ததாகவும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (உ-3)

### பொருள்களைச் சுருட்ட

## செம்மணிப் பகுதி வீடுகளுக்கு சென்றவர் கால் இழந்தார்

### மற்றும் ஐவர் படையினரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஜன.20

செம்மணிப் பகுதியில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசத்தில் உள்ள வீடுகளில் பொருள்களை எடுக்கச் சென்ற குழுவில் ஒருவர் மிதிவெடியில் சிக்கினார்; மற்றும் ஐவர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த கு.ஜெகதீஸ்வரன் (வயது-20) என்பவரே மிதிவெடியில் சிக்கி இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் அவர் அனு

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வன்னிப் பிரதேசத்தில் நேற்று விமானக் குண்டுவீச்சு

ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை தாங்கள் அறிவித்துள்ள நிலையில்,வன்னியில் நேற்று விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றிருப்பதைத் தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் வன்னியில் விமானப் படையினர் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் -

இத்தாக்குதலைக் கண்டித்து விடுதலைப் புலிகள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும் - 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

அதேசமயம்-திருவையாறுப் பகுதியில் கிபிர் விமானம் வீசிய குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் வெண்புறா அமைப்பினால் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-164)

### மீளத் திரும்பமுடியாது தவிக்கும்

## 3,500 பேரை புலிகளின் பகுதிக்கு திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடு

வவுனியா,ஜன.20

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து வவுனியாவுக்கு வந்து மீளத்திரும்ப முடியாமல் தங்கியுள்ள 3 ஆயிரத்து 500 பேரை அங்கு அனுப்ப செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபரின் கோரிகையின் பேரில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அரசப் பிரதிநிதிகளுடனும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்களின் பயனாக பிரதி சனிக்கிழமை தோறும் 700 பயணிகளை வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு அழைத்துச் செல்வதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்படி முதலாவது அணி இன்று வன்னி செல்லும்.

*பெரும் எண்ணிக்கையான பயணி*

(16ஆம் பக்கம் பார்க்க)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தை மாதம் 9ஆம் நாள் (22.01.2001) திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் 7.45 மணிவரையுள்ள மூல நட்சத்திர சுப முகூர்த்த வேளையில்

திரு.திருமதி சடாட்சரம் தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன்
**புலேந்திரன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி செந்திராஜா தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி
**ஜெயகௌரி**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று **கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி ஆலயத்தில்** முருகன் திருவருள் துணையுடன் நடைபெற விருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றஞ் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திருமதி ஜெகசோதிமலர் சடாட்சரம்**
43, ஆடியபாத வீதி, திருநெல்வேலி.
**திரு.திருமதி ச.புவிச்சந்திரன்**
வீனோ நகைப் பூங்கா, கஸ்தூரியார் வீதி.

**திரு.திருமதி ஜெ.செந்திராஜா**
அபிராமி அச்சகம், சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

✪ இரு வீட்டார் அழைப்பு ✪ (C/14910)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




அராலி மேற்கைச் சேர்ந்த
**செல்வராசா - சிவகுகனி தம்பதிகளின்**
அருந்தவப் புதல்வி
## செல்வி கர்ஷினி செல்வராசா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20.01.2001) சனிக்கிழமை சுவிற்சர்லாந்திலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். கர்ஷினியை அம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தங்கை ஆகியோர் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**- குடும்பத்தினர்.**

*"வைரபதி",*
*இணுவில் மேற்கு, இணுவில்.* (C/14903)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் கதிரவேலு பரமசாமி

**தோற்றம்** 15-04-1942 **மறைவு** 20-12-2000

எமது பாசமிகு சகோதரனின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் பத்திரிகை மூலமும், கடிதமூலமும் அனுதாபத்தினைப் பகிர்ந்தவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (21-01-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தலையாழி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (83151)

திருமதி சண்முகடாஸ்
(சகோதரி)

## லஷ்சுமி
இணுவில்

விஜயகாந்த் (இருவேடம்)
மீனா நடித்த
**வானத்தைப் போல**
(நீல்ஸ்)
காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.) (83144)

## நாகம்ஸ்
சுன்னாகம்

கடைசி வாரம்
**டைட்டானிக்**
(தமிழ் ~ நீல்ஸ்)
✪ இது ஓர் உண்மைச் சம்பவம்.
காட்சிகள்:
10.30, 2.30 (புதிய நேரம்) (83162)

## ராஜா
யாழ்ப்பாணம்

**பிரசாந்த், சிம்ரன், லைலா, ரகுவரன், வையாபுரி**
மற்றும் பலரின் நடிப்பில் (C/14851)
*பார்த்தேன் ரசித்தேன்*
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)

# கனனி புலமைப்பரிசில் பரீட்சை - 2001/2002

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கான நுழைவுத் தேர்வுப் போட்டிப் பரீட்சை நாளை (21.01.2001) ஞாயிறன்று நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பப் படிவக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் உடனடியாக எமது யாழ்ப்பாண, வடமராட்சி கிளைகளில் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை (**Admission Card**) பெற்று அதில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றவும்.

இலவச பரீட்சைக் கட்டணத்துடனான பரீட்சார்த்திகள் தங்களிடம் உள்ள பரீட்சை அனுமதி அட்டையினை (**Admission Card**) பின்வரும் பாடசாலைகளில் உள்ள பரீட்சை மண்டபங்களில் சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்றலாம்.

**யாழ்ப்பாணக் கிளையில்**

பாடசாலையூடாக விண்ணப்பித்தோர்:
**J/Jaffna Hindu College** அல்லது
**J/Jaffna Hindu Ladies College**

தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்தோர்:
**J/Jaffna Central College**

**வடமராட்சிக் கிளையில்**

பாடசாலையூடாக விண்ணப்பித்தோர்:
**J/Viknaeswara College**

தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்தோர்:
**J/Vadamarachchi Ladies College**

*பரீட்சைத் திகதி: 21.01.2001* *நேரம் :10.00* **a.m.** (S.L.T)

(C/14911)

## DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
124/2, Palaly Road, Thirunelvely
T.P. No: 021 - 2596
N.M.M.V. Road, Nelliyadi.

கலைஞர்களையும் கலைப் படைப்பாக்கங்களையும் பரீட்சயப்படுத்தி ஆவணப்படுத்தும் முயற்சியில் யாழ். பல்கலைக்கழக கலைவட்டம் வழங்கும்

## நிகழ்ச்சித் தொடர் - I
# முதுசம்
## S.பத்மலிங்கம் அவர்களின்
### கர்நாடக இசைக் கச்சேரி

காலம் : நாளை (21.01.2001) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 3.00 மணி
இடம் : கைலாசபதி கலையரங்கு
யாழ்.பல்கலைக்கழகம்

இசை அனுபவப் பகிர்வில் கலந்துகொள்ள நீங்களும் அழைக்கப்படுகின்றீர்கள்.

**நுழைவுச் சீட்டுக்கள் வாயிலில்** (83155)

நிகழ்வு சிறப்புற வாழ்த்துவோர்:-
**தாசா கொங்கிறீட் தொழிலகம்**
தாவடி மானிப்பாய் வீதி, தாவடி.
கொங்கிறீட் கற்கள், கூரை ஓடுகள் விற்பனையாகின்றன.

கடமை உணர்வை எமக்கு விதைத்துவரும்
# வெள்ளிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



எங்கள் அதிபர்
## உயர்திரு.வி.சிவஞானபோதன் (B.A.)

தனது 33 வருட சேவையில் 25 வருடங்கள் யா/வட்டு.மத்திய கல்லூரியில் சேவையாற்றி வெள்ளி விழாக் காண்கின்றார். இவ்வாறான நீண்ட சேவையாளனை

**மனமார வாழ்த்துகின்றோம்.**

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/வட்டு.மத்திய கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(83153)

# உதயன்

## அரசின் நிலையில் மாற்றம் தேவை

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குச் சமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் விதத்தில் கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி தொடக்கம் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை ஒரு மாத காலத்திற்கு அறிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நல்லெண்ண நடவடிக்கையை அமெரிக்கா உட்பட்ட ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் வரவேற்றிருந்தன. அரசாங்கமும் பதிலுக்குப் போர் நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுக்களை நேர்வழியில் முன்னெடுக்கும் என்றே அந்நாடுகள் கருதியிருக்கும். இலங்கை மக்களும் அவ்வாறே எதிர்பார்த்தனர்.

ஆனால் இலங்கை அரசாங்கமோ, பேச்சுவார்த்தையைத் தொடங்கிய பின்னரே போர் நிறுத்தம் செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டைக் கைக்கொண்டுள்ளது. அவ்வாறு செய்வதே அர்த்தமுள்ள சமாதானமுயற்சியாக இருக்கும் என்று பல நியாயங்கள் எடுத்துக் கூறியும், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லி அழுங்குப் பிடியாக நிற்கிறது அரசு.

அது மட்டுமன்றி, போரை வலுவாக்கி, தான் இழந்த பகுதிகளை மீட்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஆனையிறவை நோக்கிய படை நகர்வையும் தொடங்கிவிட்டது. அரசின் இந்த நடவடிக்கை சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்துவிடும் என்ற அச்சம் தமிழ்ப் பகுதிகளில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியிலும் தோன்றியுள்ளது.

அரசின் போர்க்குணத்தின் காரணமாக விடுதலைப் புலிகள் தமது போர் நிறுத்தத்தை விலக்கிச் சமரில் இறங்கக் கூடும் என்று மக்கள் ஊகிக்கின்றனர். புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியின் உள்ளடக்கம் மக்களின் அந்த ஊகத்தை உறுதி செய்வதாக அமைந்திருக்கிறது. குட்டக் குட்டக் குனிய முடியாது என்பது அவரது சரியான நிலைப்பாடு.

சமாதானத்தை உண்டாக்குவதற்கு விடுதலைப் புலிகளுடனும் பேசவேண்டும் என்று விரும்பியே, அரசு நோர்வேயின் அனுசரணையைக் கேட்டது. ஆனால் அதற்கு முரணாக போரை முன்னெடுத்து வருகிறது. பேச்சுவார்த்தை நடத்தும்போது போர்க்களத்தில் உள்ள பலம் மற்றும் பலவீனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மேலோங்கிய நிலையில் நிற்க வேண்டும் என்று எண்ணலாகாது.

அதுவும் பேச்சுவார்த்தையில் விருப்பம் உள்ளதாகக் காட்டி மூன்றாமவர் ஒருவரையும் அழைத்துவிட்டு, போரை நடத்திக் கொண்டே பேசலாம் என்பது நேர்மையான சமாதான நோக்கம் கொண்டதல்ல.

போரின் பாதிப்புகளை அனுபவிக்காததால் ஆட்சித் தலைவர்கள் தமது நிலைப்பாட்டை முன்னிறுத்திக் குதர்க்கத்தனமாகப் பேசுகிறார்கள்; செயற்படுகிறார்கள். இது அமைதி— சமாதானத்தை— நாடிச் செல்வதற்கு உண்டான நல்ல தருணத்தை நழுவவிடுவதாகும்.

நாட்டு நலன் கருதி, மக்கள் நலன் கருதி அரசு தனது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். இல்லையேல் தமிழர்களை அழிக்கும் நோக்குடனேயே அரசு இந்த நிலைப்பாட்டைக் கையாள்கிறது என்றாகும்.

# திக்கம் வடிசாலையின் உற்பத்தி நவீன முறையில் மேம்படுத்தப்படும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

சிறந்த தொழில்நுட்பம் மற்றும் நவீன உபகரணங்கள் மூலம் திக்கம் வடிசாலையின் தரத்தினை உயர்த்தி அதன் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மு. பாக்கியநாதன் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

சபையின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட அவர் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கோ. சி. வேலாயுதம், சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் ஆகியோருடன் இணைந்து இந்தச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

திக்கம் வடிசாலை எம்மால் பொறுப்பேற்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சடமையாற்றும் தொழிலாளர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் ஊதியமும் தொடர்ந்து வழங்கப்படும்.

வடிசாலை வெற்றிகரமாக இயங்கத் தொடங்கியதும் தொழிலாளர்களுக்கு மிகை கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள 17 தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மதுபான விற்பனைக்குரிய உரிமங்களும் எமது சபையினால் பெற்றுக் கொடுக்கப்படும்.

### வினாசிரி உற்பத்தி

பனை அபிவிருத்திச் சபைக்கும் ப. தெ. வ. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையில் உறவினைப் பேணுவதற்குரிய நடவடிக்கைகள் தொடர்ந்து எம்மால் முன்னெடுக்கப்படும். திருகோணமலையில் சபையினால் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட வினாகிரி உற்பத்தி வெற்றி அளித்துள்ளதைத் தொடர்ந்து மானிப்பாய் ப. தெ. வ. அபிவிருத்திச்சங்கத்தினால் வினாகிரி உற்பத்தி சபையின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் வீண் விரயமாக்கப்படும் கள்ளை இந்த உற்பத்திக்குப் பயன்படுத்த முடியும். வடக்கு— கிழக்கு மாகாணத்தில் வினாக்கிரி உற்பத்திக்கு என்று இந்த வருடம் 40 லட்சம் ரூபா சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலணையில் தும்புத் தொழிற்சாலை ஒன்றும் சபையினால் அமைக்கப்பட்டுள்ளது. பளையில் தும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எடுத்த முயற்சிகள் அங்கு நிலவிய பதற்றமான சூழ்நிலைகளை அடுத்து கைவிடப்பட்டது.

பருத்தித்துறையில் பனம் பொருள் பல தொகுப்பு நிலையம் ஒன்றும் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் நாம் எடுத்த முயற்சியினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபைக்கு மேலதிக நிதியாக 2 கோடியே 30 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதியிலிருந்து வினாக்கிரி, பதநீர், பனங்கட்டி, 'பம்ரா' குடிபானம், தும்புத் தொழில், கற்பகம் விற்பனை நிலையங்களை மேம்படுத்தல், பனை நடுகை, மாதிரிப் பண்ணைகள், பனை இன விருத்தித்தொழில் நுட்பம், ஆராய்ச்சி அபிவிருத்தி, போத்தலில் கள் அடைத்தல் உட்பட பல வேலைத் திட்டங்கள் சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

### வெளிநாட்டு நிறுவனம் ஆர்வம்

சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பனங்களியில் இருந்து நுண்கிருமி எதிரி உற்பத்தி குறித்து கேள்விப்பட்ட பிரான்ஸிலுள்ள நிறுவனம் ஒன்று இந்தத் தொழில் நுட்பத்தின் உரிமத்தினை தங்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. வெளிநாட்டு நிறுவனமொன்றின் இந்தக் கோரிக்கையானது எமது சபையின் ஆராய்ச்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.

இந்த நிறுவனத்துடன் இது தொடர்பான உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடுவதன் மூலம் இங்கிருந்து பனங்களியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நாட்டுக்கே பெருமை தேடித் தர முடியும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (ஐ-5)

# ஊர்காவற்றுறையில் வீடமைப்புத் திட்டம்

காரைநகர், ஜன. 20

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 'திவரகம' மீனவர் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நூறு வீடுகள் அமைக்கப்பட உள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கடற்றொழிலாளர் குழுக் கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ. குமாரசாமிசர்மா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வீடும் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட உள்ளதாகவும் இதற்கு 'திவரகம' வீடமைப்புத் திட்டத்தினால் 50 ஆயிரம் ரூபாவும் வடபகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் 25 ஆயிரம் ரூபாவும், வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட உள்ளது.

மேற்படி பணத்தின் ஒரு பகுதி வீடமைப்புத் திட்டத்தில் உருவாக்கப்பட உள்ள 'திவரகம' மீனவக் கம்பனிக்கு மீளச் செலுத்தப்பட வேண்டும் எனவும் அப்பணம் கிராம அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மீனவ வீடமைப்புத் திட்டமானது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவு, காரைநகர் தென்மேற்கு, மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான பயனாளிகள் தெரிவும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-73)

## நாளை

தை 08

ஞாயிற்றுக்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 2. 24 வரை.

நட்சத்திரம்: கேட்டை

முற்பகல் 10. 37 வரை.

பிரதோஷ விரதம்.

சுபநேரம்: 9. 35 — 11. 05

ராகுகாலம்: 5. 05 — 6. 35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன 20

ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா தலைமையில் நடைபெறும். (8-10)

### உதயவாக்கு

நம்பிக்கை இழந்து, கௌரவமும் போய் விட்டால், மனிதன் பிணம் தான்

## மாநகர சபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். மாநகர சபை மேயர் சட்டத்தரணி என். ரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு முன்னதாக 23 ஆம் திகதி மாநகர சபையின் சுகாதாரக்குழு, மராமத்துக்குழு, நிதிக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (உ-5)

## கத்தி வெட்டு

யாழ்ப்பாணம், ஜன 20

இருவருக்கிடையில் நீண்ட நாள்களாக இடம்பெற்று வந்த பகை கத்திவெட்டில் முடிந்தது.

நீர்வேலி மேற்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராமுப்பிள்ளை செல்வரட்ணம் (வயது 57) என்பவர் தலையின் பின்பகுதியில் வெட்டுக்காயத்திற்கு இலக்கானார். (உ-15)

## பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜன. 20

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கான "கபடி," "எல்லே" பயிற்சி முகாம் இன்று காலை 9 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகத்தின் வழிகாட்டலில் விளையாட்டு உத்தியோகத்தர் க. விஜிதரன் இந்தப் பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (உ-7)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சங்கத் தலைவர் வி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் 1998, 1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள், வழங்கப்படும் என்றும், அனைத்து மத்தியஸ்தர்களையும் சமுகம் கொடுக்குமாறும் சங்கச் செயலாளர் எஸ். சிறிகாந்தன் கேட்டுள்ளார். [ஐ]

## கரப்பந்தாட்டம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகில் உள்ள யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றன. (3-86)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். வை எம். சி. ஏ. யின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 2.30 மணி— ஆண்கள் — சென். ஜோன்ஸ் கல்லூரி அணி எதிர் யாழ். இந்துக் கல்லூரி 'ஏ' அணி.

★ பிற்பகல் 4 மணி — பெண்கள் — திருக்குடும்ப மகா வித்தியாலயம் எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ பிற்பகல் 5 மணி — யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் யாழ். இந்துக் கல்லூரி 'பி' அணி. (-3)

## கல்விக் கண்காட்சி

சங்கானை, ஜன. 20

வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரிய அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில், குழந்தை மையக்கல்வி முறையிலான கல்வி உபகரணக் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சித்தன்கேணி கணேசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

முன்பள்ளி ஆசிரிய அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி அ. லில்லியஸ்ரீனா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் ஸ்ரீ தேவநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ. செல்லையாவும் பேருட் அமைப்பின் திட்டமுகாமையாளர் ஆன் அன்றில் வெஸ்ரும் பங்குபற்றுவர் (3-29)

## தேங்காய் விழுந்து காயம்

தென்னை மரத்தின் கீழ் நின்ற பெண் தலையில் தேங்காய் விழுந்து காயமடைந்தார்.

நாவாந்துறையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அலோசியஸ் பற்றீசியா (வயது 38) என்பவர் உச்சந் தலைப் பகுதியில் உட்காயத்திற்குள்ளானவராவார். சுயநினைவிழந்த நிலையில் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (உ-15-13-1)

## சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

20–01–2001

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் இன்று (20-01-2001) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு (புதிய நேரம்) **சுன்னாகம் வர்த்தக சங்கப் பணிமனையில்** நடைபெறும்.

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் எல்லைக்கு உட்பட்ட சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்நிகழ்வில் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர்

**திரு. க. ஆனந்தராசா**

கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

நன்றி.

இ. மகேஸ்வரன்
தலைவர்.

சி. செல்வசிலன்
செயலாளர்.

(83112)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் ம. அன்ரனி

(முன்னாள் இலங்கை கடற்படை அலுவலகப் பணியாளர்)

தோற்றம்: 19 - 11 - 1923
மறைவு: 21 - 12 - 2000

அன்பின் தெய்வமே! உம் பிரிவால் துயர மடைந்தோம். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

தகவல்:
அ. தேவதாசன் (மகன்),
ஈச்சமோட்டை, பாசையூர்,
யாழ்ப்பாணம்.

(83088)

## நன்றி நவிலல்



### திருமதி பரமேஸ்வரி இராஜசிவகுமார்

(திரவியம்)

தோற்றம்: 29 — 03 — 1953
மறைவு: 07 — 12 — 2000

திரை கடல் ஓடித் திரவியம் தேடச்சென்ற
திரவியமே!
குடும்பத்திற்கேற்ற குலவிளக்காய் விளங்கிய எம்
அன்புத் தெய்வமே!
எப்பொழுதும் எங்களுக்காய் எறித்த முழு நிலவைக்
காணாது கண்ணீர் வடிக்கின்றோம்.
மீண்டும் ஒருமுறை எம் நிலவு முகம் காண்பதற்கு
வரம் தந்தருள வேண்டுமம்மா!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னார் நோயுற்றிருந்தவேளை இன்முகத்துடன் சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், நலன் புரிச் சங்கத்தின் ஊழியர்களுக்கும், மரணச் செய்தி கேட்டு நேரில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உதவிகள் புரிந்த அனைவருக்கும் மற்றும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும், மதிய போசன வைபவத்திலும் கலந்து கொண்ட அயலவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கணவர், பிள்ளை,
தந்தை, தாய், சகோதரர்கள்.**

அ. கருணாமூர்த்தி,
மூத்த விநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(83139)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன.20

இம்மாதம் 18 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேசசெயலர் ரீதியாக வருமாறு: –

**சங்கானை**

(174996ஏ), (175809டி), (176575பி), (176673ஏ), (176859ஏ), (176899ஏ), (178693ஏ), (178746பி), (179022ஏ), (179022ஈ), (170621ஏ), (177461ஏ).

**நல்லூர்**

(177144ஏ), (165883ஏ), (166809ஏ), (178529ஏ), [178642பி), (179004ஏ), [172724பி), (176559ஏ), (176718ஏ], [176904பி], (178578ஏ], [178633பி], [178723பி), [178915பி]·

**தெல்லிப்பழை**

(178536ஏ), (178539பி), (178684பி),

**உடுவில்**

(173138ஏ), (176710சி), (178515பி), (178515எவ்) (178613சி], (178703ஏ), (169358ஏ), (175809ஏ), (175809ஈ), (176575சி), (176673பி), (176860ஏ), (176980ஏ), (178724ஏ), (178907ஏ), (179022பி),

**கோப்பாய்**

(170621பி), (177462ஏ), (163039ஏ), (177144பி), (165883பி), (169371ஏ), (178587ஏ), (178642சி), (179004பி), (174720ஏ), (176612ஏ), (176835ஏ), (178546ஏ), (178578பி), (178635ஏ), (178800ஏ), (17898ஏ), (169310ஏ), (178536பி), (178569ஏ), (178684சி), (160621ஏ), (173138பி), (176932ஏ), (178515சி), (178581ஏ), (178676ஏ), (178731ஏ), (169358பி), (175809பி), (175809எவ்), (176645ஏ), (176693ஏ), (176861ஏ), (176980ஏ), (178724பி), (178922ஏ), (179022சி), (170502ஏ), (177425ஏ), (177423ஏ), (177118ஏ), (177144சி), (165883சி), (176823ஏ), (178589ஏ), (178643ஏ),

**சண்டிலிப்பாய்**

(174930ஏ), (176612பி), (176865ஏ), (178546பி), (178614ஏ), (178718ஏ), (178879ஏ), (178984ஏ), (176950ஏ), (178538ஏ), (178569பி), (178697ஏ), (160751ஏ), (176710ஏ), (176956ஏ), (178515டி), (178613ஏ), (178676பி), (178828ஏ), [178836ஏ], [178994ஏ], [179013டி], [178909ஏ], (178909பி), (179013ஏ), [179013பி],

(ஐ-10)

## தவறவிட்ட கைக்கடிகாரம்

யாழ்ப்பாணம், ஜன. 20

நல்லூர் தெற்கு நாவலர் வீதிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று மின்சாரசபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டோர் யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள மின்சாரசபை அலுவலகத்தில் சோ. இராசா என்பவருடன் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஐ)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுமுன்பாக நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர்காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில், மேலதிக சிகிச்சைக்காக மனைவியை கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கான திகதியைப் பார்வையிடவந்தவரான, சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம் (வயது 55) என்பவரும் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவரும், யாழ். போதனா வைத்தியசாலையில் பயின்று வரும் வைத்தியபீடமாணவனும் காயடைந்தனர்.

காயடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-15)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

### வாசுகி தியாகராஜா

எமது கல்லூரி முன்னாள் ஆசிரியை திருமதி வாசுகி தியாகராஜா அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம்; அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்;

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.

(83147)

## அறிவித்தல்

புத்தூர் மேற்கு கௌரி மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் இச்சங்கத்தில் மாணவர் சேமிப்புச் செலுத்திய **ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலை மாணவர்களும் ஏனையோரும் தமது பாஸ் புத்தகங்களை 15.02.2001க்கு** முன்னர் **திருமதி சரஸ்வதி வித்தியானந்தன்** அவர்களிடம் சமர்ப்பித்து தமது கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

S. வித்தியானந்தன்
தலைவர்.

து. கோமதி
செயலாளர்.

(83141)

## வாழ்த்துகிறோம்

தஞ்சமளித்த வள்ளல்

### திரு.வி. சிவஞானபோதன்

(அதிபர், யா/ வட்டு. மத்திய கல்லூரி)

அவர்கள்

தனது 33 வருட ஆசிரிய சேவையில் 25 வருடங்களை யா/ வட்டு. மத்திய கல்லூரியில் நிறைவு செய்யும் இத்தருணத்தில் இவர் சேவை சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், யா/மிருசுவில் றோ. க. வித்தியாலயம்
இணைக்கப்பட்ட தென்மராட்சி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(83130)

## அறிவித்தல்

யாழ். மாவட்ட

### கரபந்தாட்டச் சங்கம்

### ஆண்டுப் பொதுக்கூட்டம்-2000

காலம்: **21-01-2001** ஞாயிற்றுக்கிழமை
நேரம்: **காலை 10.00 மணி**
இடம்: **கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபம்**

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தில் இணைந்த கழகங்கள் தங்கள் கழகத்தின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளையும், மகளிர் கரபந்தாட்ட அணி உள்ள கழகங்கள் மகளிர் சார்பில் ஒரு பிரதிநிதியையும் மேற்படி கூட்டத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

Capt.
D. A. M. குணசிங்கம்
தலைவர்.

இ மனோகரன்
செயலாளர்.

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம்,

[83131]

# முட்டுக்கட்டையை நீக்கும் யோசனைகளுடன் சொல்ஹெய்ம் ஓரிரு தினங்களில் வருவார்

## நோர்வே தூதரக அதிகாரி தகவல்

கொழும்பு,ஜன.20

★அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை நீக்கக் கூடியதான புதிய யோசனைகளுடன் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த சில தினங்களுக்குள் இலங்கை வரவிருக்கிறார்.

★நோர்வே தொடர்ந்தும் அனுசரணையாளராகச் செயற்படுமே ஒழிய, பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராக இருக்கமாட்டாது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்போர்க் தமிழ் அரசியல் கட்சி மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

11 தமிழ் அரசியல், தொழிற்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் நோர்வே தூதுவரை தூதரகத்தில் சந்தித்து விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்தை உரிய முறையில் சாதகமாகப் பயன்படுத்த அரசை சர்வதேசம் நிர்ப்பந்திக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறியதுடன், அது தொடர்பான மகஜரொன்றையும் வெஸ்போர்க்கிடம் கையளித்துள்ளது.

தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம்.எஸ்.செல்லச்சாமி, மேலமாகாணசபை உறுப்பினரும், ஐ.தொ.கா.தலைவருமான மனோ கணேசன், யாழ்.நகர முதல்வர் என்.ரவிராஜ், தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) லண்டன் பிரதிநிதி சம்பந்தன், முஸ்லிம் அமைப்புக்களின் தலைவர் அஷ்ரப் அஸ்ஸ், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி என்.குருபரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் வில்சன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சுமார் 90 நிமிடங்கள் நீடித்த பேச்சுவார்த்தையின் போது 11 தமிழ் அமைப்புகள் ஒன்றுபட்டு ஆக்கபூர்வமாகச் செயற்பட முன்வந்திருப்பதை வரவேற்ற நோர்வே தூதுவர், சகல தமிழ் அரசியல், சமூக, தொழிற்சங்க அமைப்புகளும் ஒன்றுபட்டால பிரச்சினைகளைச் சாதகமாக அணுகக் கூடிய முறை மேலும் இலகுவாக ஆகிவிடும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப முயற்சிகளை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கான சில, புதிய யோசனைகளுடன் அடுத்த ஓரிரு தினங்களுக்குள் எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கு வரவிருக்கின்றார். அந்த விஜயம் ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுப்பதில் சாதகமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கக்கூடியதாக அமையலாம் என்று நோர்வே தூதுவர் நம்பிக்கை தெரிவித்ததாகப் பிரதிநிதிகள் குழுவினர் கூறினர்.

இன நெருக்கடிக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம்தான் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கும் அரசாங்கம், அதே நேரத்தில் சமாதானத்தை வலியுறுத்தக் கோரும் மக்களின் குரலுக்கு தடைகளைப் போட முயற்சிப்பதானது புரியாத ஒரு புதிராகவே இருப்பதாகவும் வெஸ் போர்க தங்களிடம் தெரிவித்ததாகத் தூதுக்குழுவில் இடம்பெற்ற தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் கூறினார்.

புலிகளின் போர்நிறுத்தத்தைச் சாதகமாக அரசு பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறிய தூதுக்குழுவினர் அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகிய சர்வதேச நாடுகளின் அழுத்தம் மிக முக்கியமானது என்றும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

தமிழ் அமைப்புகளின் மகஜரை எரிக் சொல்ஹெய்மிடம் வழங்கி அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதாகவும், அவர் கொழும்பு வரும் போது சந்தர்ப்பம் சாதகமாகவும், வசதியாகவும் அமையுமானால் நிச்சயம் தமிழ் அரசியல், அமைப்புகளின பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் வெஸ் போர்க் உறுதியளித்துள்ளார். (ஐ)

## மாணவர் விவரங்கள் பதிவு

இலவசபாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்குவதற்கு வசதியாக கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயின்றுவரும் மாணவர்களை தமது பெயர் விவரங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னதாக வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் இயங்கும் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் பதிவு செய்யுமாறு அதிபர் செ. சிவஞானம் கேட்டுள்ளார். (ஐ-173)

★ ★ ★

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது வேறு பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியுடன் இணைந்து இயங்கும் குறித்த பாடசாலையில் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் நா.அருட்சோதி அறிவித்துள்ளார்.

அத்துடன் இப்பாடசாலையைச் சேர்ந்த தருமலிங்கம் இந்திரன், தருமலிங்கம் கேதீஸ்வரன், நடராசா குகன், பாலசுந்தரம் சிவசுதன், செல்வரத்தினம் பிரதீகரன் ஆகியோர் விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

## பெரியபுராண தொடர் சொற்பொழிவு

கொழும்பு,ஜன.20

கொழும்பு கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 5.45 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழினத்திலிருந்து வந்துள்ள பேராசிரியர் டாக்டர் இரா.செல்வகணபதி இந்த சொற்பொழிவை நிகழ்த்தவிருக்கிறார். (ஐ-3-10)

# ஜூன் மாதம் நாடு முழுவதும் குடிசன மதிப்பீட்டுப் பணி

கொழும்பு,ஜன.20

சுமார் இருபது ஆண்டுகளின் பின நடைபெறும் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளை மிகவும் கிரமமான முறையில் நடத்துவதற்கு குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் பூர்வாங்க ஏற்பாடுகளை செய்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜீ.டப்ளியூ. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் குடிசன மதிப்பீடு நடவடிக்கைகளில் பிரதேச செயலர்களின் பங்களிப்பு குறித்து விளக்கமளிக்கும் முகமாக நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்ட இந்த கருத்தரங்கில் பணிப்பாளர் நாயகம் நாணயக்கார தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஒரு நாட்டுக்கு குடிசன மதிப்பீடு மிகவும் அவசியம். இந்த மதிப்பீட்டின் மூலமே நாட்டின அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிட்டு செயல்படுத்த முடியும். இலங்கையில் 1991 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த இந்த குடிசன மதிப்பீடு நடவடிக்கைகள் வடபகுதி யுத்தம், தென்பகுதி நெருக்கடி நிலை போன்ற காரணங்களினால் தடைப்பட்டன.

இம்முறை வடபகுதியில் ஒரு சில பிரதேசங்களில் யுத்தம் நிலவிய போதிலும், அப்பகுதிகளிலும் இந்த குடிசன மதிப்பீட்டை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. வன்னி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதிகளில் இந்த குடிசன மதிப்பீட்டுக்காக எல்லை நிர்ணய வரைபடம் தயாரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இப்பகுதிகளில இறுதிக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாடளாவிய ரீதியில் நடைபெறும் இந்தப் பணிகளுக்கு கிராம அதிகாரிகள் மட்டும் போதாது. எனவே புதிதாக மேலும் ஒரு லட்சம் அதிகாரிகள் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கு இரு வார காலத்துக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்படும். ஆரம்ப கணக்கெடுப்பு 10ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறும். இறுதிக் கணக்கெடுப்பு ஜூன் 28ஆம் திகதி மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரை நடைபெறும் காலப் பகுதியில் பொது மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து எமது பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# களுத்துறைச் சிறையில் உள்ள 11 பேரை விடுவிக்க உத்தரவு

கொழும்பு,ஜன.20

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் 11 பேருக்கான விடுதலை அனுமதியை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கி உள்ளது.

இந்த 11 பேரையும் யாழ்ப்பாணம் கொண்டு சென்று மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விடுவிக்குமாறு சட்ட விரோதக் கைதுகள் துன்புறுத்தல்களுக்கான ஜனாதிபதிக் குழு ஆலோசனை விடுத்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக களுத்துறைச் சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சின்னையா அற்புதராசா, இராசரத்தினம் பஞ்சலிங்கம், சிவராசா சுதர்சன், சிறில் ஷெல்டன் நிரோஸ், குணரட்ணம் குணசீலன், முத்துலிங்கம் ஜெயானந்தன், பொன்னன் உதயகுமார், சிவலிங்கம் கமலேஸ்வரன், தேவநாயகம் ரொனால்ட், சின்னத்துரை இந்திரக்குமார், கார்த்திகேசு கலைநுபன் ஆகியோரை விடுதலை செய்வதற்கான அனுமதியை சட்டமா அதிபர் வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி இவர்களை விடுதலை செய்யுமாறு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாணம் செல்வதற்கான போக்குவரத்து வசதி இல்லையென்று சிறைச்சாலை ஆணையகம் கூறியுள்ள போதிலும் இவர்களை கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் அழைத்துச் செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கையும் பின்னர் கைவிடப்பட்டது.

இதேவேளை-

இந்தப் 11 பேரின் விடுதலை தொடர்பாக உறவினர்கள் யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையத்தில் முறையிட்டால் யாழ்.மஜிஸ்திரேட் நீதிபதியின் அனுமதியுடன் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிபதி முன்னிலையில் விடுவிக்க உத்தரவைப் பெற முடியும் என பொலீஸ் தலைமையக நீதிமன்ற விவகாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கத்தில்

# கிளைகளில் விற்பனையை ஊக்குவிக்க பரிசுத் திட்டம்

தென்மராட்சி,ஜன.20

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வடமராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் இயங்கும் 16 கிளைக் கடைகளில் வியாபாரத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட ஊக்குவிப்புப் போட்டியில் உடுப்பிட்டியில் உள்ள ஒன்பதாம் இலக்க கிளைக் கடையின் முகாமையாளரும், விற்பனையாளர்களும் டிசெம்பர் மாதத்திற்குரிய ஊக்குவிப்பு பரிசினையும்; பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

இக் கிளையில் டிசெம்பர் மாதத்தில் 7லட்சத்து 71ஆயிரத்து 820 ரூபா பெறுமதியான நிவாரண உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 2லட்சத்து 40ஆயிரத்து 457ரூபாவுக்கு ரொக்க விற்பனையும் இடம்பெற்றுள்ளது. இதற்காக கிளை முகாமையாளர் இ.ஜெகநேசன், விற்பனையாளர்கள் சி.சிவசுப்பிரமணியம், ப.அருள்நாதன் ஆகியோர் இப்பரிசில்களை வென்றுள்ளனர்.

கடந்த புதனன்று நெல்லியடியில் இயங்கும் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற எளிமையான வைபவத்தில் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் பணப் பரிசில்களையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் இவர்களுக்கு வழங்கினார்.

இடம்பெயர்ந்து இக்கட்டான நிலையில் தங்கியுள்ள சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயல்பட இந்த ஊழியர்கள் ஏனையோருக்கு முன்னுதாரணமாக திகழ்வதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார், கணக்காளர் சு.சுந்தரலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (ஐ-117)

## கைவிட்டு வந்த பவுஸரை காணவில்லை

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கென சாவகச்சேரி நகரசபையினால் கடந்த 1999 இறுதிப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டு இடம்பெயர்வின் போது கைவிட்டு வந்த தண்ணீர் பவுஸரைக் காணவில்லை என அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அலுவலகத்தில் கைவிட்டு வந்த இரும்புப் பெட்டகம் மற்றும் தண்ணீர் பவுஸருக்கு தண்ணீர் நிரப்ப பயன்படுத்தும் நீரிறைக்கும் இயந்திரம் உட்பட அலுவலக பாவனையில இருந்த பல பொருள்களை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# வாசகர் திருமுகம்

## வாழுங்கள்; வாழவிடுங்கள்!

வடமராட்சியின் சில பகுதிகளில் ஆலய ஒலிபெருக்கிகளின் அதிகாலைத் தொல்லை தாங்கமுடியாதுள்ளது. இது ஒரு போட்டித் தொழில் (Competitive job) ஆக வடிவமெடுத்து வருவதாகத் தோன்றுகிறது. தங்கள் தங்கள் ஆலயங்களின் Imageஐ உயர்த்திக் காட்டுவதற்காக விசேட தினங்களில் அதிகாலை மூன்று மணிக்கே பலத்த ஒலியில் பாடல்களை ஒலிபரப்புகின்றார்கள். இப்பாடல்களானது அதிகாலை ஆறு மணி வரை சரமாரியாக ஒலிபரப்பப்படுகின்றது. இந்நேர இடைவெளியானது நிர்ச்சலனமான தூக்கத்துக்குரியது. முக்கியமாக வதிரி, அல்வாய், தேவரையாளி என்ற மும்முனைப் பிரதேசத்தில் இவ்வநியாயம் தீவிரமாக நடக்கின்றது. சமகாலத்தில் ஒலிக்கும் இப்பாடல்களால் தூக்கம் கெட்டு மறுநாள் தங்கள் கடமைகளை உற்சாகமாகச் செய்ய முடியாமல் மக்கள் விசனமடைகின்றனர். சிக்கல் தன்மையுடைய இந்த ஒலியலைகளால் (Complicated sound waves) தூக்கம் கெடுவது ஒருபுறமிருக்க எந்தவொரு பாடலையும் ஒழுங்காக செவிமடுக்க முடியாதுள்ளது. போதாக்குறைக்கு இதே நேர இடைவெளியில் சரமாரியான நாதசுரமும் தடல்புடலான தவில் அடியும் ஒன்று சேர்ந்துவிட்டால் தொல்லையின் எல்லைக்கு அளவே இல்லை. இப்பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மையான உயர்தர மாணவர்கள் கலைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். கலைப் பிரிவுப் பாடங்களானவை ஆழமாக மனனம் செய்யப்பட வேண்டியவை. எனவே இச்சத்தங்களானது அதிகாலையில் தங்களது மனன சக்தியைக் கெடுக்கிறது என மாணவர்கள் முறையிடுகின்றார்கள். அதிகாலைப் பொழுதானது மனனம் செய்வதற்கு உகந்த ஒரு நேரம் என்பது ஒரு உளவியல் உண்மை. மேலும் இப்பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மையான இடம்பெயர்ந்த மக்கள் வறியவர்கள். அன்றாடம் வசதி படைத்த வீடுகளில் ஏதாவது வேலை செய்தே தங்கள் சீவனோபாயத்தைக் கொண்டிருக்கிறார்கள். பகல் முழுவதும் கஷ்டப்பட்டு உழைக்கும் இவர்கள் நிம்மதியாக உறங்கினால்தான் அடுத்த நாள் உற்சாகமாக வேலைக்குச் செல்ல முடியும். அதிகாலைத் தூக்கம் கெட்டுவிட்டால் தாங்கள் அடுத்த நாள் சீவியப்பாட்டுக்கு என்ன செய்வதென்று அன்றாடம் காய்ச்சிகளான இவர்களும் புலம்புகின்றார்கள். எனவே விசேட காலங்களை மக்களுக்கு நினைப்பூட்டவேண்டுமானால் ஒவ்வொரு ஆலயமும் இந்நேர இடைவெளியில் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு பாடல்களை குறியீட்டுப் பாடல்களாக (Symbolic Songs) ஒலிபரப்பினால் போதாதா? பின்பு பகல் பிறந்ததும் மக்கள் தங்கள் காரிய கருமங்களுக்கு சென்ற பின்பு சரமாரியாக சகட்டுமேனிக்கு ஒலிபரப்பலாம்தானே.

ஆலய நிர்வாகங்கள் தமது போட்டி மனப்பாங்கை விடுத்து மக்கள் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். மக்களுக்காக மதமேயன்றி மதங்களுக்காக மக்களல்ல என்ற கருத்தையும், 'நீயும் வாழு பிறரையும் வாழவிடு' (live and let live) என்ற கருத்தையும் சிந்தனையில் நிறுத்தி ஆலய நிர்வாகங்கள் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டியது அவசியம். போனது போகட்டும் இனியாவது செய்வார்களா?

கரவெட்டி. - யாழ்.வதிரிவாசன்.

## கவனிப்பார் யாருமில்லையா?

இன்றைய யுத்தகால சூழ்நிலையில் இடம்பெயர்ந்து வாழும் தென்மராட்சி மக்கள் ஓரளவு நிவாரண உதவியைப் பெற்றுள்ள போதிலும் வடமராட்சியின் தெற்கு பிரதேசமான அந்தணத்திடல் கப்பூது என்னும் விவசாய கிராம மக்களும் பெரும்பான்மை எல்லோரும் இடம்பெயர்ந்து ஆறு மாதங்களாகி விட்டன. அவர்களுக்கான எவ்வித உதவியும் இன்னும் கிடைக்கவில்லை. விவசாயத்தையே தமது சீவியமாகக் கொண்டு வாழும் இக்கிராம மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக நெற்பயிர்ச்செய்கை, மேட்டு நிலப் பயிர்ச்செய்கை என்பவற்றைக் கைவிட்டு இன்று கரவெட்டிப் பிரதேசங்களில் உறவினர் வீடுகளில் வாழ்கின்றனர். ஆகவே யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவது அரசின் கடமையாகும். இக்கிராம மக்களுக்கான உதவியை அரச அதிகாரிகளோ, நிறுவனங்களோ எவ்வித அமைப்புக்களோ இதுவரை செய்வதற்கு அக்கறை கொள்ளவில்லை. இத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் முயற்சி எடுப்பார்களா?

அந்தணத்திடல் - சி.செல்வகுமார்.

# வீதிகளைத் திருத்தக் கோரிக்கை

வலி.மேற்கு,ஜன.20

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட பல வீதிகள் திருத்தப்படாமல் இருக்கின்றன.

இந்த வீதிகளைத் திருத்தியமைப்பதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்வேண்டும் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட பல வீதிகள் கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாமல் உள்ளன. சில தார் வீதிகள் மண் வீதிளாக காட்சியளிக்கின்றன. சிறிய மழை பெய்தாலும் இந்த வீதிகளினால் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே இந்த வீதிகளைத் திருத்தி அமைக்க பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-175)


# நூல் வெளியீடு

மதுரை தமிழ்ச் சங்க பண்டிதை
**ஸ்ரீமதி ந.பத்மாசனி அம்மாள்**
அருளிய

## புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின்
உரை விளக்கத்துடன்

*இடம்:-* புலோலி பசுபதீசுவரர் பார்வதவர்த்தனி கலா மண்டபம்
*காலம்:-* 03.02.2001 சனிக்கிழமை
*நேரம்:-* காலை 10.00 மணி (இல.நே.)

வெளியீட்டுரை :- **பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்**
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
மற்றும் **பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
(பீடாதிபதி, பட்டப் பின்படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
(வருகை ஆய்வு விரிவுரையாளர்,
கச்சூயின் பல்கலைக்கழகம், ஜப்பான்)

அடியவர்களையும், ஆர்வலர்களையும்
அன்புடன் அழைக்கின்றேன்.

அ.சோமசுந்தரம்பிள்ளை.
பட்டயக்கணக்காளர்

(83127)


# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 8,11 .வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்றும் நாளையும் நடைபெறவிருந்த செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# கூட்டுறவுச் சங்க கிளைக்குழு தெரிவு

சண்டிலிப்பாய்,ஜன.20

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 13 கிளைகளில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளைப் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டு புதிய கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் தலைமையில் இக்கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவு மேற்படி 13 கிளைகளிலும் நடத்தப்படவுள்ளது.

சங்கத்தின் சகல கிளைகளின் உறுப்பினர்களுக்கும் இது பற்றிய அழைப்புக் கடிதங்கள் இவ்வாரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# செயலமர்வு

வலி.தெற்கு,ஜன.20

8,11 ஆம் தரங்களில் கத்தோலிக்க சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இம்மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. கத்தோலிக்க சமயம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-152)

# தப்பியோடிய 36 படையினர் கைது!

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 34 படைச்சிப்பாய்கள் மற்றும் 2 கடற்படையினர் நிக்கவரெட்டிய பகுதியில் பொலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

நிக்கவரெட்டிய தொகுதியில் 10 பொலீஸ் பகுதியிலுள்ள கிராமங்களை இரவு ஒரு மணிக்குச் சுற்றி வளைத்த பொலீஸார் 6 மணி நேரமாகத் தேடுதல் நடத்தி இந்த 36 பேரையும் கைது செய்தனர். (ஐ)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
## கந்தையா சிவலிங்கம்

தோற்றம் 20.01.1938 — மறைவு 21.12.2000

அமரர் கந்தையா சிவலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.01.2001) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*169/6, முதலாம் ஒழுங்கை,*
*அரசடி வீதி,*
*நல்லூர்.*

சி.சுதர்சன் (மகன்)
(பாப்பா வெல்டிங் வேக்ஸ்-
திருநெல்வேலி)

(83105)



# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**செல்வி**
**விக்னேஸ்வரன் திவ்யா**

அன்னை மடியில் 25-09-1986
இறைவன் அடியில் 07-12-2000

துள்ளித் திரிந்த உனது நினைவுகள்
அள்ளி அள்ளி எறிந்தாலும் போகுமோ?
நாற்பத்தைந்து நாள்கள் மறைந்தாலும்
நான்கு வார்த்தைகள் நினைவிருக்கும்.
எங்கள் அன்புக்குரியவளே! எங்கு சென்றாலும்
உன்னைத் தேடுகின்றோம். காணவில்லை
நினைவலைகள் வந்து செல்கின்றன.
நீ ஒலித்த மொழிகளின் ஓசை
இன்றும் எம்மை விட்டுப் போகவில்லை.
உன்னை எண்ணி வாழும் இந்த உள்ளங்கள்
கண்ணீர் வடிக்கும் ஈரவிழிகள் தான்...!

எமது குலவிளக்கு அணைந்த செய்தி கேட்டு நேரிலும் கடித மூலமும் தொலைபேசி மூலமும் துக்கத்தைப் பகிர்ந்தவர்களுக்கும் உடன் உதவிய யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் சோ.சங்கர்ராஜ், செல்வி இ.ரஜிதா அவர்களுக்கும் மேலும் பல வழிகளிலும் உதவிய யாழ்.வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மாணவ மாணவிகளுக்கும் யாழ்.ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகளுக்கும் இ.போ.ச முகாமையாளர், அதிகாரிகள், சாரதி, காப்பாளர்களுக்கும், ஏனையோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் -

இன்று (20-01-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் பகல் 11.00 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.*

(83118)

உன் பிரிவால் வாடும்
**அப்பா, அம்மா,**
**சகோதரர்கள்.**

# திருமண நிகழ்வில் சமயக் கிரியைகளைவிட படப்பிடிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதா?

## நூல் வெளியீட்டு விழாவில் அர்த்தமுள்ள கேள்வி

*சித்தன்கேணி பிரம்மஸ்ரீ சபா. வாசுதேவ சர்மாவின் 'அர்த்தமுள்ள விவாகம்' நூல் வெளியீட்டு விழா பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் சித்தங்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு ஆற்றப்பட்ட உரைகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.*

விழாவில் சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் வாழ்த்துரையில், இளம் சந்ததியினருக்கும் பாமர மக்களுக்கும் உதவும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் ஆசிரியர் சிறு வயதிலேயே தனது கன்னி முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார். நூலாசிரியர் தனது பாட்டனார் ஞான பண்டிதக் குருக்களின் வழியில் இன்று இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளார். ஞான பண்டிதக் குருக்கள் கிரியைகள் செய்வதில் சிறந்து விளங்கியவர். அவருடைய வழியில் நூலாசிரியர் சிறந்து விளங்குவார். என்பது கன்னி முயற்சியான இந்நூலின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது என்று கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் அருளாசியுரையில் -

இன்று இளம் வயதில் அந்தணர் பரம்பரையில் வந்த ஒருவர் 'அர்த்தம் உள்ள விவாகம்' என்னும் நூலை எழுதி வெளியிடுவது பாராட்டத்தக்கது. நூல்கள் பல எழுதலாம் ஆனால் அது மக்களைச் சென்றடையக் கூடிய நூல்களாக அமைந்து கொள்ளவேண்டும். அந்த வகையில் வாசுதேவ சர்மா இளம் வயதிலேயே தனித்து தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி ஒரு நூல் வடிவிலே 'அர்த்தம் உள்ள விவாகம்' என்னும் நூலைத் தந்திருக்கின்றார். என்றால் அது இலகுவான காரியம் அல்ல - என்றார்.

### விவாகத்தின் தாற்பரியம்

'விவாகச் சடங்கும் தாற்பரியமும்' என்னும் தலைப்பில் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் சிறப்புரையாற்றும் போது -

இன்று வெளியீடு செய்யப்படவுள்ள நூலினாலே, நாம் செய்யும் விவாகத்திற்கு அர்த்தம் இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிகின்றது. சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நடைபெற்ற திருமணத்தின தாற்பரியத்தை வரலாற்று நூல்களில் காணக்கூடியதாக இருக்கிறது. விவாகத்தின் தாற்பரியத்தை தெரியாமல் இருப்பதினாலேதான் இன்று திருமண வீடுகளில் ஒளிப்பதிவை மேற்கொள்கின்றவர்கள் திருமணங்களை நடத்துகின்றனர். ஒரு திருமண வீட்டுக்குச் சென்றவுடன் குருமாருக்கு அவர்களின் நடவடிக்கைகளின் மூலம் தெரிந்து விடும் இந்த திருமண வீட்டில் தாற்பரியத்துடன் கிரியைகளை மேற்கொள்ளலாமா? இல்லையா? என்பது. நாள், நட்சத்திரம் எல்லாம் பார்த்து எடுத்தும் திருமண நாளில் ஒளிப்பதிவுகளும் புகைப்படத்திற்கும் கூடிய நேரத்தை செலவிட்டு ஒழுங்காக கிரியைகளை செய்ய விடாது அவசரப்படுத்துவார்கள். நேரம் வந்துவிட்டது தாலியைக் கட்ட வேண்டும் என்று. பல ஆயிரம்களை செலவு செய்து எடுத்த கூறைச் சேலையை மணமகளின் மீது போர்த்திவிட்டு தாலியைக் கட்டுகின்றனர்.

மணமகனுக்கு விபூதியைக் கொடுத்தால் அவர் நிலத்தில் விபூதியைக் கொட்டுவார். நெற்றியில் பூசமாட்டார். நெற்றியில் பூசாமல் விடுவதற்கு காரணம் பவுடரினால் அழகாக ஏற்கனவே மணமகனின் நெற்றியில் மூன்று குறிகள் தென்படும். விவாகச் சடங்கின் தாற்பரியத்தைத் தெரியாமல் இருப்பதினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. மணமகனுக்குத் தீர்த்தம் கொடுத்தாலும் அவர் வாங்க மாட்டார். வாங்கினாலும் அப்படியே தோழனிடம் கொடுத்து விடுவார். தர்மத்தை அடிப்படையாக வைத்துத்தான் இந்து சமயத்தில் விவாகம் நடைபெறுகின்றது. இன்று வெளியிடப்படும் 'அர்த்தமுள்ள விவாகம்' நூலின் மூலம் மக்களுக்கு திருமணத் தாற்பரியத்தின் முக்கியத்துவம் தெரிய வரும் என்று குறிப்பிட்டார்.

'திருமண நடைமுறைகள் - வரலாற்று நோக்கு' என்னும் தலைப்பில ஜப்பான் பல்கலைக்கழக வரவு ஆய்வாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புரையாற்றும் போது கூறியதாவது:-

'1983ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டு மக்களினதும் எமது மக்களினதும் திருமண நடைமுறைகள் தொடர்பான ஆய்வு ஒன்றை நான் மேற்கொண்டேன். 'தமிழரின் திருமண நடைமுறைகள்' என்னும் நூலை வெளியிட்டேன். இந்நூலில் மிகச் சுருக்கமாக தமிழர்களின் திருமண நடைமுறைகள் பற்றி எழுதியிருந்தேன். அந்த நூலிலே தமிழர்களின் ஆரம்ப திருமண நடைமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஜப்பான் மக்களினதும் தமிழ் மக்களினதும் திருமண நடைமுறைகள் பற்றி ஒப்பிட்டு நோக்கும் ஆய்வு ஒன்று வெளிவர இருக்கின்றது. அந்த நூலுக்கு நல்ல தரவுகளை தரக்கூடிய நூலாக இன்று வெளியிடப்படவிருக்கும் அர்த்தம் உள்ள விவாகம் என்னும் நூல் அமைந்திருக்கின்றது.

எங்களுடைய வாழ்க்கை நடைமுறைகள் காலத்துக்குக் காலம் மாறுபட்டு செல்கின்றது. அதன் காரணமாக எங்களுடைய திருமண நடைமுறைகள் குழப்பமான நிலையில் இன்று இருக்கிறது. அண்மைக்காலமாக எமது மக்கள் மேலை நாடுகளுக்குச் சென்றமையினால் அங்குள்ள கலாசாரத்தில் ஈடுபட்டு திருமண நடைமுறைகள் ஒரு குழப்பத்தில் இருக்கின்றன. இந்த முறையில் நான் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற போது அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் திருமண நடைமுறைகள் பற்றி நூல் ஒன்றை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டனர். இதனால் நானும் பேராசிரியர் கலாநிதி கோபால கிருஷ்ண ஐயர் அவர்களும் சேர்ந்து தொகுத்து 'திருமண நடைமுறைகள்' பற்றி நூல் எழுதி வழங்கினோம்.

### முன்னோர்கள் விதித்த நடைமுறை

ஜப்பானிய மாணவர்களுக்கு பதினாறு தமிழ மக்களுடைய திருமண ஒளிப்பதிவு நாடாக்களை போட்டுக்காட்டினேன். அவர்கள் இந்த ஒளிப்பதிவு நாடாக்களை பார்த்த பின்பு நடைமுறைகளில் வேறுபாடு இருப்பதாகச் சுட்டிக் காட்டி ஏன் இப்படி இருக்கின்றது என்று கேட்டனர்? திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்துகின்ற வாழ்வியல் நடைமுறையாக இருந்தாலும் அந்த வாழ்வியல் நடைமுறையில் பெண்ணுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. தாய்க்கு பின் தாரம் என்ற பழமொழி நாங்கள் அறிந்த ஒன்று. எங்களுடைய நடைமுறைகளை பேணுகின்ற பொறுப்பு பெண்ணுடன் விடப்பட்டுள்ளது.

ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்தும் போது அந்த வாழ்க்கையில் பலவீனங்கள் ஏற்படும் போது அந்த வாழ்க்கையை சீர் செய்வதற்காக பெரியோர்கள் சேர்ந்து சில நடைமுறைகளை விதித்துள்ளனர். தங்களுடைய வாழ்க்கையின் முன் அனுபவங்களையும் ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களையும் கொண்டு நடைமுறைகளை விதித்துள்ளனர், அவர்கள் கொண்டு வந்த தீர்மானங்கள் தான் இன்றைய திருமண நடைமுறைகள் ஆகும். மேலை நாடுகளில இருவரும் சட்டப்படி திருமணம் செய்து கொள்கின்றனர். பின்னர் இருவரும் சட்டப்படி பிரிந்து செல்கின்றனர். குடும்ப வாழ்க்கை என்பது என்ன? திருமணம் என்பது என்ன?

ஒரு குடும்ப வாழ்க்கைக்கு திருமணம் என்பது அவசியம் தானா என்ற நிலை தோன்றியுள்ளது.

எங்களுடைய திருமண நடைமுறைகள் எங்களுடைய வாழ்க்கையின் வளத்துக்கு மட்டுமல்ல எங்களுடைய எதிர்கால தலைமுறையினரின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றது என்ற உண்மையை இன்று மேலைத்தேச மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். உலகத்தில் இன்று பல்வேறு நாடுகளில் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் பெண்கள் எமது திருமண நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### வெளியீட்டுரை

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்ட ஆய்வுப்பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரையில் -

வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்கள் பண்பாட்டைப் பேண வேண்டும் என்ற நிலையிலும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் திருமணம் பற்றி எழுகின்ற கேள்விகளுக்கு விடையளிக்கும் நிலையிலும் இன்றைய நூல் வெளிவந்துள்ளது. திருமணம் தனிமனித தேவை மாத்திரமன்றி ஒரு சமூகத் தேவையுமாகும். மலையரசனுடைய மகளாகிய உமையம்மையை சிவபெருமான் உலகம் அறியும் படியாகத் திருமணம் செய்து கொண்டார்.

**தொகுப்பு: வி.ரி.கதிர்காமநாதன்**

உலகமெல்லாம் நடக்கும் இச் சமூக நடைமுறை இடத்துக்கிடம் அவ்விடத்துப் பண்பாட்டு நடைமுறைகளுக்கேற்றபடி வேறுபடுகின்றது. இவற்றையெல்லாம் மனதில் கொண்டே இந்த நூலாசிரியர் திருமணம் பற்றிய செய்திகளை எழுதியுள்ளார். இளைஞர்கள் மனதில் எழுகின்ற கேள்விகளை எண்ணி அவற்றுக்கான விடைகளை ஆகம விவாக நடைமுறைகளை மனதில் கொண்டு எழுதியுள்ளார். திருமணம் தொடர்பான வினாக்களுக்கான விடைகளை எல்லோரும் விளங்கத்தக்க முறையில் இலகுவான தமிழில் ஆசிரியர் எழுதியுள்ளார்.

'தோரண வாயில்' என்னும் பகுதி திருமணம் பற்றிய ஒரு வரலாற்று நோக்காக அமைகின்றது என்றார். ✪

---

# சுயாதீன குழுக்களால் தமிழிலக்கிய மாநாடு பிராந்திய மட்டத்திலும் நடத்தப்பட வேண்டும்

கடந்த செப்ரெம்பர் முதலாம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் சென்னையில் இடம்பெற்ற 'தமிழ் இனி - 2000' மாநாடு பல எதிர்பார்ப்புக்களை இலக்கிய ஆர்வலர்களிடையே ஏற்படுத்தியிருந்தது. உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு புறம்பாக கடந்த நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் சாதித்த சாதனைகள் எட்டப்பட்ட, எட்டப்பட்டிருக்கக் கூடிய சாதனைகள் பற்றி தமிழ் எழுத்தாளர், விமர்சகர், ஆர்வலர் ஒன்றுகூடி விவாதிக்க வேண்டிய அவசியத்தை இந்த மாநாடு உறுதிப படுத்தியது. எனினும் பல தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்தி மாநாடு வெற்றி பெற்றதா என்பது ஆராயப்பட வேண்டியதே.

கடந்த நூற்றாண்டில் தமிழ் நாட்டில் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனம், தலித் இலக்கியம், பெண்ணியல் வாதம், மாக்ஸிய இலக்கியம், கட்டுரை இலக்கியம், குழந்தை இலக்கியம், இதழியல், சினிமா என்பவற்றின் வளர்ச்சிகள், மாற்றங்கள் பற்றிய அமர்வுகள் புதுமைப்பித்தன் அரங்கிலும், ஈழத் தமிழிலக்கியம், புலம்பெயர் இலக்கியம், மலேசிய இலக்கியம் பற்றிய அமர்வுகள் கைலாசபதி அரங்கிலும் நடத்தப்பட்டன. இரு வேறு அமர்வுகளாக இவை அமைந்ததனால பரஸ்பர பரிமாற்றங்களுக்கு இம்முறைகளம் கொடுக்கவில்லை என்பது, கவலைக் குரியது. ஆயினும் பல கட்டுரைகளை, பல தலைப்புகளில் நடத்தியமை பல்வேறுபட்ட ஆய்வுக்கும், பன் கலந்து கொளளும் வாய்ப்புக்கும் வித்திட்டது. இரு முக்கிய இலக்கிய, விமர்சன கர்த்தாக்களின் பெயர்களில் அரங்குகள் பெயரிடப்பட்டமை பொருத்தமானதே. தமிழகத்தில் சிறுகதை மூலம் இலக்கிய ஜாம்பவானாக மிளிர்ந்த புதுமைப்பித்தனும், விமர்சனம் மூலம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஈழத்தவர் கைலாசபதியும் நினைவு கூரப்பட்டமை பாராட்டத்தக்கது.

இலக்கிய விவாதங்களுடன் ஓவிய ரசனைக்கு ஓர் ஓவியக் கண்காட்சியும், நாடகப்பிரியர்களுக்கு இரு நவீன நாடகங்களும், புத்தக பிரியர்களுக்கு

## 'தமிழ் இனி - 2000' ஒரு பார்வை

புத்தக விற்பனைக் கூடங்களும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன. இரு மாநாட்டு மண்டபங்களுக்கு புறம்பாக புத்தக விற்பனைக்கூடத்தினைச் சுற்றியும் இலக்கிய பிரமுகர்கள் நின்று மூன்றாவது விவாத அரங்குகளை ஏற்படுத் தியிருந்தனர். இது முறையில் (informal) அமைப்பாக, சுதந்திர தனித்துவ விவாதங்களுக்கும் வழிசமைத்தது. இரு அரங்குகளிலும் விவாதங்கள் சுவை குன்றினால் தனியாள்-சிறுகுழு அரங்குகள் வெற்றிகரமான விளைவுகளை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும். உள் அரங்குகள் அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டிருந்தால் பார்வையாளர்கள், கேட்போர் ஒன்றிப்பும், ஊடாட்டமும் அதிகரித்திருக்கும். நீண்ட செவ்வக மண்டபங்கள் இலக்கிய விவாதங்களுக்கு பொருத்தமற்றவை. இதனால் கைலாசபதி அரங்கு மண்டப முற்றத்துக்கு இடம்மாறியது. புலம் பெயர் இலக்கிய விவாதம் வட்ட வடிவில் அமைந்த களத்தில் மாலைப்பொழுதில், தூறல் மழையின் போதும் வெற்றிகரமாக நடைபெற்றது.

பாண்டிச்சேரி ஆறுமுகம் மற்றும் கலைக்குழுவினரின் இரு நவீன நாடகங்களும் அரங்கைப் பயன்படுத்திய விதம், கருப்பொருள் தெரிவு என்பவற்றில் புதுமைகளை செய்ய முயன்றார்கள். எனினும் ஈழத்து நவீன நாடகங்களுடன் ஒப்பிடும் போது அரங்கைப் பயன்படுத்தியமை போதாது என்பதும், கருப்பொருளின் வீச்சு விஸ்தரிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. நடிப்பில் அவர்கள் சிறப்பாக இருந்தமை பாராட்டுக்குரியது. தெனாலிராமனின் கதையை வைத்து தமிழக அரசியலையும், புகைவண்டிக்கு காத்திருக்கும் 'இருவர் பின்னணியில் போராட்ட அரசியலையும் சித்திரிக்க முயன்றார்கள். வாழ்வின் முழுமையைத் தரிசிக்க நாடகங்கள் இடந்தரவில்லை மேலும் தமிழக வாழ்வின் ஒரு கூறைக்கூட அனுபவிக்கமுடியவில்லை.

**கந்தையா ஸ்ரீகணேசன்**

மாநாட்டின் முக்கிய விளைவு அது பெற்றுக்கொண்ட எதிர்ப்புக் குரல்கள். மாநாட்டுக்கு முதல்நாள் இடம்பெற்ற 'காலச்சுவடு' அமைப்பின் நூல் வெளியீட்டு நிகழ்வில் நிறப்பிரிகை குழுவினர் எதிர்-துண்டுப் பிரசுரம் வழங்கினர். காலச்சுவட்டின் பிராமணிய பின்புலம் காரணமாக அது விமர்சிக்கப்பட்டது. பின்னர் வெளிவந்த விமர்சனங்கள் அர்த்தமற்ற வாதங்களை முன்வைத்தன. மாநாட்டுச் செலவு புலம்பெயர் மக்களின் பெரும் பங்கு எனவும், வீண்செலவு எனவும், இந்தியாவில் புலம்பெயர்ந்தோர் அழைக்கப்படவில்லை எனவும், தமிழிலக்கியத்துக்கு முடிசூடாமன்னர் ஆவதற்கு 'காலச்சுவடு' குழுவினர் முயற்சிக்கின்றனர் எனவும், எதுவித முடிவுகளும் எட்டப்படவில்லை எனவும் பலதரப்பட்ட விமர்சனங்கள் எழுந்தன. இவ்வளவு விமர்சனங்களும் எழுந்தன என்பதே ஒரு வகையில் மாநாட்டுக்கு வெற்றிதான். அதனை விட முக்கியமான விளைவு இப்படியான ஒன்றுகூடல்கள் அவசியம் என்பது ஆங்கில இலக்கியம் பற்றிய மாநாடுகள் உலக அளவில் பிராந்திய அளவில் நடத்தப்பட்டு வருவது போல், உலகத்தமிழ் இலக்கிய மாநாடுகள் அவசியம். 'அமைப்பு - எதிர்' குழுக்கள் இவற்றை ஒழுங்கமைக்கும் போது கூடிய சுதந்திரக் கருத்துக்கள் முன்வைக்கப்படும். அரசு சார்பு எனில் அரைத்த மாவை அரைக்கும் போக்குகளே தென்படும். எனவே சுதந்திர அமைப்புகள் ஒன்றுகூடி இவ்வாறான மாநாடுகளைப் பிராந்திய மட்டத்திலும் நடத்த வேண்டும். ◇

---

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் "தமிழ மத்திய தர சினிமாவில் அவலஹாஸ்யம்" என்ற தலைப்பின் கீழ் 2ஆவது திரைப்படமாக கே.விஸ்வநாத்தின் "சலங்கை ஒலி" எனும் திரைப்படம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வலர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவிக்கிறார். (உ)

## கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படும்

சண்டிலிப்பாய், ஜன.20

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை பட்டின உப அலுவலகப் பகுதியிலும், சங்கானை சந்தைச் சுற்றாடலிலும் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை கட்டாக் காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்படவுள்ளன. அன்றைய தினம் தங்கள் வளர்ப்பு நாய்களை வீடுகளில் கட்டி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டட வேலை பூர்த்தி

சண்டிலிப்பாய், ஜன.20

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் 10 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டு வரும் மருத்துவருக்கான விடுதியின் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

வைத்தியசாலை ஊழியர்களுக்கான இரு விடுதிகள் இவ்வருடத்தில் இங்கு நிறுவப்படவுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஜ-135)

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண் / பெண் ஆகிய இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் கோரப்படுகின்றன. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி 2001.02.12 ஆகும்.

02. தற்போது இப்பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 99 ஆகும். மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்குறிப்பிட்டவாறு இருந்த போதிலும் ஆள் சேர்க்கும் சந்தர்ப்பத்தில் சேவையின் தேவையைப் பொறுத்து இவ் வெற்றிடங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கோ, கூட்டுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கே உரித்தானதாகும்.

**03. சேவை நிபந்தனைகள்:**

1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள் / தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.
2) இது ஓர் இடமாற்றச் சேவை ஆகும். இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

**04. சம்பளஅளவுத் திட்டம்**

பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (III) இற்கு அமைய
ரூபா 51,840 - 7 x 1320 - 10 x 1560 - 76,680 (T - 3 - 1 - 1)

**05. தகைமைகள்**

அ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
ஆ) சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
இ) விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையில் / மாகாண அரச சேவையல் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
ஈ) வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளிலாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: *வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்த போதிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.*

உ) கல்வித் தகைமை

விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதாவது ஒன்றினை உடையவராக இருத்தல் வேண்டும்.

(1) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி, தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்புளோமா பெற்றிருத்தல் வேண்டும்.
(2) தேசிய பயிலுனர் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
(3) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.
(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.
(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(6) மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்குச் சமமானதென வடக்கு-கிழக்கு மாகாண இலங்கை தொழில் நுட்பவியல் சேவை சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு ஏனைய தகைமைகள் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: *இவ்விண்ணப்ப முடிவுதிகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**06. ஆள்சேர்ப்பு முறை:**

அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத் திட்டம், அரசு சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப் பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் ரத்துச் செய்யப்படும். எனினும் இந்த நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**07. எழுத்துப் பரீட்சை**

இப்பரீட்சை தமிழ்/சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு:-

1. பொது உளச்சார்பு - ஒரு (01) மணித்தியாலம் - 100 புள்ளிகள்.
சொற்றொடர்கள் எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கிரகிப்பு அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையிலான தொடர்புகளைப் புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

2. பொது அறிவு - ஒரு (01) மணித்தியாலம் - 100 புள்ளிகள்.
இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.
பகுதி (I) - 50 புள்ளிகள்
சூழல் விஞ்ஞான அறிவு. உலக விஞ்ஞான தகவல் தொடர்பாக உள்ள பரீட்சார்த்தியின் அறிவையும் தெளிவையும் அளவிடுவதற்காக
பகுதி (II) - 50 புள்ளிகள்
இவ்வினாத்தாள் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் நிர்மாணம், கட்டட மேற்பார்வை, வீதி நிர்மாணமும் பராமரிப்பும், நீர்வழங்கல் வடிகாலமைப்பு, போன்றவற்றின் அறிவினையும் தெளிவினையும் அளவிடுவதற்காக.

**08. பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200 ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200 ஐச் செயலாளர் மாகாணப் பொதுச சேவை ஆணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாணம் திருகோணமலை என்ற பெயருக்குக் காசுக்கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**09. விண்ணப்பிக்கும் முறை:**

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கமைவாக ஏ4 அளவிலான (21செ.மீ X 29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களை தயாரித்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் 2001.02.12 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல.35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல்வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வடக்கு- கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்(சிவில்) வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2001 என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்குத் தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்காவிடின் அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

**10. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:**

| நகரம் | எண் | நகரம் | எண் |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 1 | 6. திருகோணமலை | 6 |
| 2. மன்னார் | 2 | 7. மட்டக்களப்பு | 7 |
| 3. வவுனியா | 3 | 8. அம்பாறை | 8 |
| 4. கிளிநொச்சி | 4 | 9. கல்முனை | 9 |
| 5. முல்லைத்தீவு | 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**திருமதி க.சிவசிதம்பரம்.**
**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

(9ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மாதிரி விண்ணப்பப்படிவம்

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II 'ஆ' பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் : வண/திரு/திருமதி/செல்வி
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :
03. தபால் முகவரி :
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :
04. பால்: ஆண்: M/ பெண் : F :
05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
தமிழ் : T/ சிங்களம் : S
06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண் :
(10ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)
07. இனம்: :

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | - 1 | இந்தியத்தமிழர் | - 4 |
| இலங்கைத்தமிழர் | - 2 | ஏனையவர் | - 5 |
| முஸ்லீம் | - 3 | | |

08. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
09. விவாகமானவரா / விவாகமாகாதவரா?
10. அ) பிறந்ததிகதி : வருடம் : மாதம்: திகதி :
ஆ) 2001. 02. 12 ஆம் திகதியன்று வயது: வருடங்கள் : மாதம் : நாள்கள் :
11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
(2) பிரதேச செயலர் பிரிவு:
(3) வதியும் கால எல்லை: தொடக்கம்:- வரை:-
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின் தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம் :
(5) தற்காலிகமாகஇடம்பெயர்ந்து வதியும்மாவட்டம் : மாகாணம்:
இடம் பெயர்ந்த ஆண்டு : மாதம் : திகதி:
12. தகைமைகள்:
விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் 5 ஆம் பந்தியில் (உ)பிரிவில் குறிப்பிட்ட எத்தகைமையின் கீழ் விண்ணப்பிக்கின்றீர்.
13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்

14. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட ................. பிரதேச செயலகத்தின்................ ஆம் இலக்க ........................ ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
திகதி: ..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
15. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா74,100/- இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.
16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/செல்வி ........................என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.
திகதி: ..................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்
கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி : முகவரி : (பதவி முத்திரை)
(வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும் அவர்................ திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ........................ மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.
திகதி: ..................................................
பிரதேச செயலாளர் / கிராம சேவகர் கையொப்பம்
பதவி :
முகவரி : (பதவி முத்திரை)
(C/14852)


# ஆத்மீக நூல் தினம்



அமைதி பெற்று ஆனந்தம் பிறக்க, ஆத்மீக நூல்கள் கற்றிடுவோம். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். ஆத்மீக நூல்களை நாங்கள் வாசிப்பது மட்டுமல்ல மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் கையிருப்பில் "ஆத்மீக நூல்கள்" பல வைத்திருக்க் வேண்டும். திருமண, பிறந்தநாள் போன்ற நிகழ்வுகளின் போது நீங்கள் வழங்கும் மற்ற அன்பளிப்புகளுடன் ஓர் ஆத்மீக நூலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இடம் : "சாயிபாபா களஞ்சியம்" கோயில் வீதி, நல்லூர்.
காலம : இன்று (20-01-20[illegible]) சனி காலை 9.00 மணி
* அன்புடன் அழைக்கின்றோம் *
(83098)



# Jaffna College Institute of Technology
## Vaddukoddai.

## வார்ப்புப் பயிற்சி நெறி
## (FOUNDRY PRACTICE)
Foundation Course in Foundry Practice

மூன்று மாத காலத்தில் சுய தொழிலாக ஈடுபட விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பை தேடிக் கொள்ள விரும்பும் G.C.E. (O/L) வரை படித்த மாணவர்களுக்கு வடபகுதி மூலப் பொருள்களைக் கொண்டு கற்கும் பயிற்சி நெறி

## பயிற்சி நெறி அடக்கும் கற்கை
1. அச்சுமண் (Moulding Sand) தயாரிக்கும் முறை
2. அச்சுப்பள்ளம் (Moulds) தயாரிக்கும் முறை
3. கரு (Core) தயாரிக்கும் முறை
4. உலை (Furnace) தயாரித்து அலுமினியம், பித்தளை உருக்கி வார்க்கும் முறை
5. பாதுகாப்பு முன்னெச்சரிக்கை (Safety Precaution)

## உற்பத்தி செய்யும் பொருள்கள்:
1. நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள். Pump Casing, Impeller, Distance Place, End shield, Cooling fan, Fan cover.
2. சமையல் பாத்திரங்கள்
தாச்சி, தோசைக்கல் போன்றவை

*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.*

விண்ணப்பப்படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி நெறிகள் Feb. மாதம் முதல் வாரம் ஆரம்பிக்கப்படும்.

Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.
(C/14876)



# முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மலர்வு 23 - 12 - 1966



உதிர்வு 01 - 02 - 2000

## அமரர் வேலாயுதம்பிள்ளை விமலன்
(சாயி மாஸ்ரர்)
(கணித ஆசிரியர், யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி)

திதி 20-01-2001

அன்பினில் விளைந்த எங்கள் அமுதமே விமலா
உன்மேல் மன்பதை உலகில் வேறு மைந்தனைக் கண்டதில்லை
இன்புறதை எய்தி எங்கள் இதயத்தை மகிழ்வித்தாய் என்று
எண்ணியதை நிறுத்தி எமை ஏங்க வைத்தகன்றாயே!
கண் புதைத்தழுது ஓர் ஆண்டகன்றது எனினும் தேவா
மண் மிதித்திந்த நாட்டில் வந்திடுவாய் என்று
கண் விழித்திருந்து காப்போம் கண்மணியே வருவாய் ஐயா!

*சாஸ்திரியார் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.*

தங்கள் பிரிவையாற்றாத
- குடும்பத்தினர் -
(C/14889)

## ஆஸ்பத்திரியில் சிரமதானம்

சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் முதல் பணியாக மேற்கொள்ளப்படும் நுளம்பு ஒழிப்புக்கான சுத்திகரிப்புப் பணி யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த புதனன்று சிரமதான முறையில் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான சுத்திகரிப்புப் பணியில் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பங்குகொண்டனர். ஆஸ்பத்திரி வளவின் பெரும்பாலான பகுதியில் புல் பூண்டுகள் அகற்றப்பட்டன. குப்பை கழிவுகளும் துப்புரவு செய்யப்பட்டன.

இச்சிரமதானப் பணி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஐ-139)

## கைதான இளைஞர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20

படையினரால் கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் விசாரணைகளின் பின்பு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி முன்னிலையில் விடு விக்கப்பட்டார்.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாக கடந்த 15 ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்ட- உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ரஞ்சித்குமார் (வயது 21) என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார். (உ-10)

## பட்டதாரி பயிலுநர் மூவர் நியமனம்

பட்டதாரி பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டோரில் மூவர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நியமனக் கடிதங்கள் நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளதாகவும் அலுவலக நாள்களில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

பட்டதாரி பயிலுநர்க்ளாக நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களும், நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளின் விவரமும் வருமாறு:-

★ யமுனா சிவசுப்பிரமணியம் - புலோலி தெற்கு (பளை மத்திய கல்லூரி)

★ குமாரசாமி ரவீந்திரன் - பெரியபளை(பளை மத்திய கல்லூரி)

★ கதிரவேலன் ஜெயகலா - புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) (ஐ-31-117)

## பரீட்சையில் சித்தி

யாழ்.பல்கலைக்கழக உள்வாரி பதவி உயர்வு பரீட்சைகளில் எழுதுவினைஞர் தரம் II க்கு தோற்றிய 11 பேரும் சித்தியடைந்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்பவியலாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (உ-ம)

## 'பைக்கற்று'களில் பதநீர் விரைவில் விற்பனைக்கு வரும்

யாழ்ப்பாணம்,ஜன.20

பனை மரத்தில் இருந்து இறக்கப்படும் பதநீரை பொலித்தீன் 'பைக்கற்று'களில் அடைத்து சந்தைப்படுத்துவதற்கான பரீட்சார்த்த முயற்சியை பனை அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளது.

இவ்வருட பனங் கள் 'சீசனின்' போது இந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மு.பாக்கியநாதன் தெரிவித்தார்.(ஐ-5)


# 1st Year Death Remembrance



Born 08 - 11 - 1949

Died 20 - 01 - 2000

**Mrs. Lankadevy Shanmuganathan**
(Sothimany)
Lanka Cement LTD.

May you rest in the hands of God.

**Beautiful memories of you will always remain in our heart.**

***Ever loving Husband, Brothers, Sisters, in - laws relatives and friends.***

No.07 kalasalai Road, Thirunelvely.

No.21 kanagaratnam Road, Ariyalai. (83064)

முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழியில் ஆறுமாதப் பயிற்சி

கடைசித் தகைமை

க.பொ.த. (சாதாரண தரம்)

விவரங்களுக்கு:-

பாலர் ஆசிரியர் சங்கம், கொக்குவில். (82997)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 06 - 1932



மறைவு 01 - 02 - 2000

அமரர் கிருஷ்ணர் நல்லநாதன்
(ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ கோப்ரல்)

திதி 20-01-2001

ஆண்டு ஒன்று கழிந்தாலும்
ஆறாதையா எங்கள் மனம்!
நிறையாதையா உங்கள் வெற்றிடம்!!

என்றும் உங்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

இலக்கணாவத்தை, உடுப்பிட்டி (83028) - குடும்பத்தினர்.

உ
முருகன் துணை

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் வடமராட்சி மணிவிழா சபையினர் நெல்லியடி வர்த்தகர்கள் நிதி ஆதரவில் நடத்தும்

# பேராசிரியர் அ.சண்முகதாஸ்



(உயர்பட்ட ஆய்வுபீட பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின்

## வடமராட்சி மணிவிழா

இடம் :- நெல்லை முருகன் திருமண மண்டபம், நெல்லியடி.
காலம் :- நாளை (21-01-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி.

மங்கள இசை V.K.கானமூர்த்தி குழுவினர்கள்.

தலைவர்
திரு. ஆ.சிவநாதன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)

கௌரவிப்பும் வாழ்த்துரையும்
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

மணிவிழா மலர் வெளியீடு:
திரு.சோ.பத்மநாதன் [சோ.ப.]

ஆசியுரைகள்:
சிவஸ்ரீ கௌரிபாலக்குருக்கள் (பிரதமகுரு, நெல்லை முருகன் ஆலயம்)
சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்)
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (துர்க்காதேவி ஆலயம், தெல்லிப்பழை)

பாராட்டுரைகள்:
பேராசிரியர் நா.ஞானக்குமாரன் (மெய்யியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு.மா.நடராஜசுந்தரம் (பீடாதிபதி, முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
திரு.செ.கிருஸ்ணராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பாராட்டுரைகள்:
திரு.ஆ.சிவசுவாமி (பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு)
திரு.செ.ஸ்ரீனிவாசன் (பிரதேச செயலர், வ.தெ.மே)
திரு.S.சிவராசா (கல்விப்பணிப்பாளர், வடமராட்சி வலயம்)
பண்டிதர்.க.சச்சிதானந்தம் (முன்னாள் விரிவுரையாளர்)

சிறப்புரைகள்:
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

வடமராட்சி நாதஸ்வரக் கலைஞர்களின் மங்கள இசையுடன் மாலை நிகழ்வு புதிய நேரம் 2.30க்கு ஆரம்பமாகும்.

பட்டி மண்டபம்
நடுவர்: திரு.குமாரவேல் (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி)
வாதிடுவோர்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள்

நாட்டிய நாடகம்
திருமதி சாந்தினி சிவனேசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) அவர்களின் நெறியாள்கையில் அவரது மாணவிகள்

வில்லிசை
யாழ்.பல்கலைக்கழக நாட்டார் இயல் கழக 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகப் புகழ் அருந்தவநாதனின் அம்பிகை குழுவினர்கள் வழங்கும் ஸ்ரீவள்ளி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்.
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் வடமராட்சி மணிவிழா சபையினர். (83090)

# புலிகளின் 'மல்ரி பரல்' தாக்குதலால் படையினருக்குப் பெரும் பாதிப்பாம்!

## இராணுவப் பேச்சாளர் வெளியிட்ட தகவல்

கொழும்பு,ஜன.20

விடுதலைப்புலிகள் நடத்திவரும் பல்குழல் றொக்கெற் (மல்ரி பரல்) தாக்குதல்களால் படையினருக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

'கினிஹிர-9' படை நடவடிக்கை தொடர்பாக அவர் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பாதுகாப்புப் படையினர் 'கினிஹிர 9' இராணுவ நடவடிக்கை மூலம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த ஏழு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புப் பகுதிக்குள் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றனர். அதே வேளை அடுத்த இராணுவ நடவடிக்கைக்கும் தம்மைத தயார்ப்படுத்தி வருகின்றனர்.

கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பகுதியைத் தொடர்ந்தும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதியை விஸ்தரிப்பதன் மூலம் ஆட்பலம் பற்றாக்குறைப் பிரச்சினை ஏற்படவில்லை.

'கினிஹிர 9' இராணுவ நடவடிக்கையின் முதலாம் நாள் படையினர் மூன்று மணி நேரத்திற்குள் இரண்டு கிலோ மீற்றர் நிலப்பரப்பை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பகுதிகளைப் பலப்படுத்திவருவதால் நேற்று (வியாழன்) மோதல்கள் இடம்பெறவில்லை. கைப்பற்றப்பட்ட இடங்களில் உள்ள கண்ணிவெடிப் பொருளகளைப் படையினர் அகற்றி வருகின்றனர். எதிரிகளின் மறைவிடங்களைத் தேடி அழித்தும் வருகின்றனர்.

ஆனையிறவில் இருந்து புலிகள் மோட்டார் ஏறிகணை, 'மல்ரி பரல்' றொகற் லோஞ்சர் என்பன மூலம் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். படையினர் முன்னேறிச் செல்லும் பாதை நாலு கிலோ மீற்றர் இடையுள்ள குறுகிய இடம். அத்துடன் இத்தாக்குதல் காரணமாகவே படையினருக்கு இழப்பு ஏற்பட்டது. (ஐ)



கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது. கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரமும் அருகில் உள்ளார்.

## விடுதலைப்புலிகளைத் தடை செய்தால்

# தீர்வு முயற்சியில் தலையிடும் தார்மீக உரிமையை பிரிட்டன் இழக்க நேரிடும்!

## தூதரக அதிகாரியிடம் தமிழ்க்கட்சி பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு,ஜன 20

சர்வதேச சமூகத்தின் நல்லெண்ண முயற்சிகளுடன் இலங்கையின் இன நெருக்கடிக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வொன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் இன்றைய சூழலில் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப்புலிகளை இணைத்துக் கொண்டால் இன நெருக்கடிக்கான பிரச்சினையில் தலையிடுவதற்கான தார்மீக உரிமையினை பிரிட்டன் இழந்துவிடலாம்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதிநிதி கரோலைன் வில்சனுடனான சந்திப்பின் போது தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பலருக்கு கரோலைன் அளித்த விருந்துபசாரத்தின் போது விடுதலைப்புலிகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்து கொண்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை நம்புகிறீர்களா என கரோலைன் தமிழ்க கட்சிகளை நோக்கி கேள்வி எழுப்பிய போது, விடுதலைப் புலிகளை நம்புவது என்பதற்கு அப்பால் போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் காலங்கடத்திக்கொண்டு வரும் அரசை எவ்வாறு நம்புவது என்பதே எமது கேள்வியாகும் என்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பதிலளித்துள்ளனர்.

தமிழ் இயக்கங்களின் தலைவர்கள் உட்பட பல முக்கியஸ்தர்களை விடுதலைப்புலிகள் படுகொலை செய்துள்ள போதிலும் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று நாம் கோருகின் றோமெனில் காரணம் இனப்பிரச்சினை தொடர்பாக பேசக்கூடிய பிரதான சக்தியாக இன்று புலிகளே உள்ளனர்.

பிரிட்டன் எமது மதிப்பிற்குரியதும் நீண்டகால நெருங்கிய தொடர்புமுள்ள நாடாகும். புலிகள் இயக்கத்தினை பிரிட்டன் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இணைத்துத் தடை செய்தால் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் அதைப் பின்பற்ற வழிவகுக்கலாம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து இன நெருக்கடிக்குத் தீர்வொன்றைக் காணவேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் அவசியமாகும். இதுவே தமிழ்க்கட்சிகளின் உறுதியான நிலைப்பாடாகும்.

எனவே பிரிட்டிஷ் அரசு விடுதலைப்புலிகள் இயக்கத்தினை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இணைப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக இடம் பெறுவதாகக் கூறப்படும் விசாரணைகளைக் கைவிட்டு இலங்கை அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்க வேண்டுமென்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி, யாழ்மாநகரசபை மேயர் என்ரவிராஜ், தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி ந.குமரகுருபரன், நாடாளுமன்ற உறுப்பினர் அவிநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமார் 4மணி நேரத்திற்கும் மேலாக தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுடனான கரோலைனின் சந்திப்பு இடம்பெற்றதாகக் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

### அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.20

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் இயங்கும் மிருசுவில் றோ.க.த.க பாடசாலையில் முறைசாராக் கல்வி பயிற்சி நெறியைக்கற்ற மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிககு வட்டு மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்படும் என அதிபர் எப்.எக்ஸ். அன்ரன் தெரிவித்துள்ளார்.

(ஐ173)

### கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.20

வலிகாமம் மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபையின் நிர்வாகக் குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். (ஐ173)

## தமிழ், சிங்கள மக்களை ஒன்றிணைத்து

# சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் கொழும்பில் பேரணி நடத்த ஏற்பாடு

## ஆயர்கள் முன்முயற்சி

கொழும்பு,ஜன.20

"நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தி, தமிழ் மற்றும் சிங்கள மக்களை ஒன்றிணைத்து கொழும்பில் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். மிக விரைவில் இதனை நடத்துவதற்காக இந்த வாரம் நான் கொழும்புக்குச் சென்று ஏனைய ஆயர்களுடன் பேசித் திட்டமிட உள்ளேன்".

- இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப்பு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு ஐந்து நாள் பயணமாகச் சென்ற அவர் மீண்டும் மன்னார் வந்ததும் அங்குள்ள மக்களின் நிலைப்பாட்டை செய்தி ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தினார். இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது. அகதிகளாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் பல்வேறு துன்பங்களின் மத்தியில் கண்ணீருடன் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டில் நடைபெறும் யுத்தத்தினால் ஆகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் இவர்களே.

குண்டுத்தாக்குதல்கள் மற்றும் உணவு, மருத்துவவசதிப் பற்றாக்குறை, கல்வி ஆகிய பலவற்றாலும் பாதிக்கப்பட்டு இனிமேல் எதையும் இழக்க முடியாது என்ற நிலையில் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரதும் எதிர்பார்ப்பு நாட்டில் மிகவிரைவில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதாகவே உள்ளது.

சமாதானத்துக்கான கரங்களைப் புலிகள் நீட்டிய போதும் அரசாங்கம் இது விடயத்தில் அக்கறை காட்டாமல் இருப்பதைப் பெரியதொரு ஏமாற்றமாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

சிங்கள மக்களில் 85 சதவீதமானோர் பேச்சுக்கள் மூலம் சமாதானம் ஏற்படுவதையே விரும்புகிறார்கள். ஏனைய உலக நாட்டு மக்களும் இதைத் தான் கூறுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் சமாதானத்துக்காகக் காட்டி இருக்கும் நல்லெண்ண சமிக்ஞைக்கு அனைத்து இடங்களிலும் வரவேற்பு இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் அது கடும் போக்கைக் கடைப்பிடிப்பதால் இதற்கான ஒரு நல்ல பதிலைக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது.

இது குறித்து நாங்கள் மிகவும் கவலைப்படுகின்றோம்.

எனினும் நாம் நம்பிக்கையை இழந்து விடவில்லை. விரைவில் நல்ல முடிவு வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். சமாதானத்தை வலியுறுத்தி அரசுக்கு மட்டுமல்லாது புலிகளுக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் ஆயர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கையெழுத்திட்ட கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம்.

இதற்கு மேலாக எதிர்வரும் மார்ச் மாதம் சமாதான யாத்திரை ஒன்றை தெற்கில் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம். (உ-ம-6)



யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆரம்பக் கல்வி நெறி மாணவர் மன்றத்தின் 'ஆரம்ப அருவி' சஞ்சிகை வெளியீட்டு விழா மன்றத் தலைவர் தலைமையில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது.

சஞ்சிகையின் முதற் பிரதியை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி செ.அழகரத்தினம், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதனிடம் வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.

விரிவுரையாளர் பா.தனபாலன் உரையாற்றுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ஐ)

# யாழ்.சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் விருதுகள் வென்று சாதனை

யாழ்ப்பாணம்,ஜன.20

தேசிய மட்டத்தில் மாவட்டங்களுக்கிடையிலான பாசறைப்போட்டிகளில் அதிக விருதுகளைப் பெற்று சிறந்த மாவட்டமாக யாழ்.மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு இரண்டாவது தடவையாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வெற்றிக்குக் காரணமான வீரர்களையும், வீராங்கனைகளையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

பாசறைப் போட்டிகளில் அழகிய சிகரம், நடனம், நாடகம் போன்ற நிகழ்வுகளை கலைகலாசாரப் பண்போடு நிகழ்த்திக் காட்டிய யாழ்மாவட்ட சென்ஜோன்ஸ் படைப்பிரிவு அணியினர் பலரதும் பாராட்டைப் பெற்றதோடு விருதுகளையும் வென்றனர்.

தேசிய கீதத்தை சிங்களத்திலேயே பாடவேண்டும் என்ற விதிக்கமைய குறுகிய காலத்தில் அதற்குரிய பயிற்சியைப் பெற்று சிங்கள மொழியில் தேசிய கீதத்தை திறம்பட பாடிய யாழ்.அணியினர் சிறப்பான பாராட்டுக்களைப் பெற்றனர்.

கே.அருந்தவராஜாவின் வழிகாட்டுதல்களின் கீழ் யாழ்.சென்ஜோன்ஸ் படையணி இந்தப் பெருமையைப் பெற்றுள்ளது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sanyo 300 இஞ்சி புறொஜெக்ரர் (பாவித்தது), Sharp 150 இஞ்சி புறொஜெக்ரர் (புதியது), Video Mics DIGITAL MIXER (NEW), M 9000 Video PANASONIC CAMERA (NEW), CANON STILL CAMERA, 350 PANASONIC DECK விற்பனைக்கு உண்டு. சங்கசபை No.3, ஆஸ்பத்திரி வீதி, கொடடிடி, யாழ்ப்பாணம். (83071)

நல்ல இன குறோட்டன், அஸ்பரஸ், கோல்டன்றோஸ், சைப்பிரஸ், அறக்கேரியா, பாம்ரீ வகைகள் மற்றும் பூங்கன்றுகள், 250g ஜம்பு நாவல் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு கிருஷ்ணா விதானை வளவு, பிப்பிலிச் சந்தி, பொன்னாலை வீதி, மானிப்பாய். (83104)

70 சிறி குபேட்டி லான்ட்மாஸ்ரர் மெசின் பெட்டியுடன் விற்பனைக்கு. தொடர்பு: க.பிரபாகரன், அரசடி சந்தி, நல்லூர். T.P.2157. (83045)

சேவல், இறைச்சிக்கோழி, பேடு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் கண்ணாடி அலுமாரி, சாப்பாட்டு மேசை, கதிரை, அலுவலக மேசை என்பனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (83126)

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட BAIRAHA FARM புறொயிலர் இறைச்சிக் கோழி CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.- 2868. (82929)

கொழும்பிலிருந்து தினமும் இறக்குமதி செய்யப்படுகின்ற சுத்தம் செய்யப்பட்ட வயிராபாம் புறொயிலர் இறைச்சி மற்றும் KEELS வகை சொசேஜஸ் என்பன குறைந்த விலையில் விற்பனையாகின்றன. இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை-250/- மொத்தமாகக் கொள்முதல் செய்வோருக்கு சலுகை உண்டு. தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, (கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (82980)

## புறொயிலர் விற்பனைக்கு

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: வி.குணபாலன், 343, K.K.S. றோட், யாழ்ப்பாணம். T.P.No.3353. வி.குணபாலன், 609, K.K.S. றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (83135)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி, புறொயிலர் (BROILER), கல்பேட், முட்டை என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 139, 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83109)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் 19, முருகேசர் ஒழுங்கை. (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (83089)

## ஆங்கிலம் விசேடமாக

O/L, A/L, ஆண்டு 8-10, G.A.Q அடிப்படை அறிவிலிருந்து Grammar உடன் துரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B.Sc. (Cey) London Inter 85,சிவன் கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (83031)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் (3ஆம் கட்டையடி) 6 பரப்பு 11குழியுடன் கூடிய வீடு (ரதி மில் வீடு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: எஸ். சூரியகுமார் (கிராம சேவையாளர்) சம்பியன் லேன், கொக்குவில். (83125)

## தவறிவிட்டது

காரைநகரைச் சேர்ந்த கனகசபை சிவஞானவதி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.326881260V) பொன்னாலைச் சந்திக்கும் காரைநகர் சிவன் கோயிலுக்குமிடையில் 08.01.2001இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.ஏகாம்பரம், தபாற்கந்தோர், காரைநகரில் ஒப்படைத்துதவவும். (83026)

நவாலியைச் சேர்ந்த செல்வி கனேசன் அனுஷா என்பவரது தேசிய அ.அ (இல.816720362X) 09-01-2001 அன்று கொக்குவிலுக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வ.சிவயோகநாதன் (ஜே.பி) ஜீவன் தொலைத் தொடர்பு நிலையம் மானிப்பாய்ச் சந்தையடி, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (83128)

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ரவிராஜ் என்பவருடைய பிரயாணப்பை(கறுப்பு) கடந்த வாரம்(09-01-2001) பயணம் செய்த 'லங்கா முடித' கப்பலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லீலா சலூன் பலாலி வீதி, உரும்பிராயில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (83114)

சாறிகள், ஜீன்ஸ் துணிகள், பிறஷர் பரிசோதனைக் கருவி என்பன அடங்கிய கறுப்பு நிற பாக் ஒன்று 15-01-2001 அன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R.செல்வராணி, c/o பசுபதி தெய்வேந்திரம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம் எனும் முகவரியிலோ அல்லது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய காரியாலயத்திலோ ஒப்படைத்துதவவும். (83134)

B.1 தொடர்மாடி, குருநகர் எனும் முகவரியுடைய அந்தோனிப்பிள்ளை வின்சலோஸ் என்பவருடைய ஃ அ.அட்டை (இல.0901014706) 16.01.2001 அன்று யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும் பீச் றோட், குருநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கடற்றொழில் சமாசம், குருநகர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (83138)

## தேவை

ரெலிகொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்புகொள்க. விள.இல. 1189, மே/பா உதயன். (83059)

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் தினவண்ணன்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற தபால் விநியோகஸ்தர், தபாலகம், மண்டைதீவு) - மணி தம்பதிகளின் பாசமகன் தினவண்ணன் ஜேர்மனியில் 16.12.2000 சனிக்கிழமை அகாலமரணமானார்.

இவர் வசந்தரோகினி (தாதிய உத்தியோகஸ்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) வசந்த மாலினி (ஆசிரியை, யா/வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்), வசந்தகலோசனி (கணக்காளர், பனை அபிவிருத்திச் சபை, கொழும்பு), வசந்தரஜனி (ஜேர்மனி), வசந்தபிரேமினி, மணிவண்ணன், கலாவண்ணன் (மாணவன் யாழ்.பல்கலைக்கழகம்), கிருபாலினி (உயர்தர மாணவி, கிளி/அக்கராயன் ம.வி) ஆகியோரின் அன்புச்சகோதரனும், கோகுலவண்ணன், ஒளிவண்ணன் (கல்விக் கோட்டம், வேலணை), சசிகாந்தன் (பிள்ளையார் களஞ்சியம், வவுனியா), லிங்கதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கேதரணி, தவகேதன், கோபிராம், அனோஜன் (ஜேர்மனி), அனோஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*த.ஒளிவண்ணன்,*
*கல்விக்கோட்டம்,*
*வேலணை.* (83129)

-சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

## மாமரங்களுக்கு மருந்து விசிறுதல்

யாழ்ப்பாணம்,ஜன.20

மாமரங்களில் ஏற்படுகின்ற 'மாவிலைத்தத்தி' நோயைக் கட்டுப்படுத்துவதற்கென வலுவிசைத் தெளிகருவி மூலம் மருந்து விசிறும் நடவடிக்கைகள் நல்லூர் கமநல கேந்திர நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மருந்து விசிற விரும்பும் மாமரச் செய்கையாளர்கள் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்தினை விசிறுவதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்தி அதியுயர் விளைச்சலைப் பெறமுடியும் என்று நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## உர வகைகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் 'சஜிந்த' கப்பலில் விவசாயிகளுக்குத் தேவையான உரவகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அண்மையில் வந்த இந்தக் கப்பலில் யூரியா,பிI ,அமோனியம் சல்பேற் ஆகிய உரவகைகளுடன் 15 இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள், 250 நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆகியனவும் எடுத்துவரப்பட்டன.

இவற்றைக் கப்பலில் இருந்து இறக்கும் பணி தற்பொழுது நடைபெற்று வருவதாக கமநலசேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-10)

## அபிராமிப்பட்டர் விழா

தென்மராட்சி,ஜன.20

அல்வாய் வடக்கு வேவிலந்தை முத்துமாரியம்மாள் ஆலயத்தில் அபிராமிப்பட்டர் விழா எதிர்வரும் 24ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு நடைபெறும்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ்.ஏ.ஏகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு சமயச் சொற்பொழிவும், பூஜையும் இடம்பெறும். (ஐ-117)

## தொண்டர் ஆசிரியரின் விவரம் சேகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் 400 தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களின் விவரங்கள் திரட்டுவதற்காக அந்தந்த வலய கல்வி அலுவலகங்களுக்குப் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள் மூலம் திரட்டப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்டோரை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## நனைந்த நிலையில் தபாற் பொதி

தென்மராட்சி,ஜன.20

யாழ்.பிரதம தபால் நிலையத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய தபால் நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பதிவுத் தபால்கள் அடங்கிய பொதிகள் நனைந்த நிலையில் காணப்பட்டதால் பதிவுத் தபால்கள் வெயிலில் காயவிடப்பட்டிருந்தன.


**புலமைப்பரிசில் 2001**

23 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| க. கபீர்த்தனா | 182 |
| *சன்னாகம் நாகேஸ்வரி வித்தி.* | |
| நி.ஜனலக்ஷன் | 177 |
| *யா. இ. ஆ. பா.* | |
| கு. லஜீந்தன் | 172 |
| *யா. இ. ஆ. பா.* | |
| ந. திருத்தணிகன் | 169 |
| *யா. இ. ஆ. பா.* | |
| வெ. ஜெயப்பிரசாந் | 169 |
| *யா. இ. ஆ. பா.* | |
| உ. நிவேதிகா | 169 |

அடுத்த பரீட்சை 21.01.2001

BOND


யாழ்.நகர். (83145)


**SOUTH ASIAN ARTS & CULTURAL CENTRE**

தென் ஆசியக் கலைகள் மற்றும் கலாச்சார நிலையம்

பட்டம் பெற்று பெருமையடைந்தோர் பலர்
பட்டம் பெற்றதனால் பட்டத்திற்கே பெருமை சேர்த்த
ஒரு சிலர் வரிசையில்

**மீண்டும் ஒரு சமாதான நீதிவான்.**



சமூக சேவையாளர்


திருவாளர் இளையதம்பி விக்னராஜா. J.P. அவர்கள்

**பன்னெடும் காலமாக இந்துக் கோயில்கள் தமிழர் பண்பாட்டின் உறைவிடமாகவும் நுண்கலைகளை பேணி வளர்க்கும் நிலையமாகவும் மட்டுமின்றி, எம் வருங்கால சந்ததியினர்க்கு எமது கலாசாரத்தை கையளிக்கும் கேந்திர நிலையமாகவும் திகழ்வதை உணர்ந்து, தான் வாழும் புன்னாலைக்கட்டுவனில் உள்ள ஆயாக்கடவை விநாயகருக்கு அழகுக்கலைகள் பல இணைந்து அற்புதப் பெட்டகமாக திகழும் பஞ்சதள இராஜகோபுரத்தையும், அன்னசாலையையும் அமைத்தது மட்டுமன்றி, அனர்த்தத்தின் பின்பு அதை மீளவும் புனருத்தாரணம் செய்து, புதுப் பொலிவு பெற்று கம்பீரமான தோற்றத்துடன் வானளாவி உயர்ந்து நிற்கச் செய்து, எமது மண்ணில் சைவமும் தமிழும் தழைத்தோங்க இறைபணியாற்றுகின்ற விக்னராஜா அவர்கள் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டமைக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

ந. யோகராஜன் S.L.T.E.S.
**பணிப்பாளர்,**
**தென் ஆசியக் கலைகள் மற்றும்**
**கலாசார நிலையம்,**
**உரும்பிராய்.**

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 03 - 1907



மறைவு 01 - 02 - 2000

## அமரர் தம்பு சங்கரப்பிள்ளை

திதி: ஏகாதசி (20-01-2001)

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
*த.சுகந்தன்(பேரன்)*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.* (83137)

இவரது பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# 2 ஆம் உலகப் போருக்குப்பின் கலிபோர்னியாவில் மின் தடை !

## மாநிலம் முழுவதும் ஸ்தம்பிதம்: அவசரகாலநிலை!!

வாஷிங்ரன், ஜன. 20

அமெரிக்காவின் கலிபோனியா மாநிலத்தில் மின்தடை ஏற்பட்டுள்ளது. இதனால் மாநிலத்தின் செயற்பாடுகள் முழுவதும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாநில ஆளுநர் அங்கு அவசர கால நிலையைப் பிரகடனம் செய்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் அமெரிக்க மாநிலம் ஒன்று ஸ்தம்பித்துப் போகுமளவுக்கு மின் தடை ஏற்பட்டுள்ளது இதுவே முதற்றடவை.

மாநிலத்தில் பல பகுதிகளில் போக்குவரத்து சமிக்ஞைகள் செயலிழந்துள்ளன. பணம் பெறும் தானியங்கி இயந்திரங்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளன. தொலைக்காட்சி நிலையங்கள் முற்றாகச் செயலிழந்துள்ளன.

இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்கு கனடாவில் இருந்து அவசர மின் இணைப்புகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த மாநிலத்துக்கு மின் வழங்கும் இரு பெரும் நிறுவனங்கள் பெரும் கடன் சுமைக்கு உள்ளாகி இருப்பதால் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாகத்தான் இந்த திடீர் மின் தடை ஏற்பட்டுள்ளதாகவும்—

ஆனாலும் வீடுகளுக்கும் வியாபார நிலையங்களுக்கும் மின் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது தமது பொறுப்பு என்றும்—

மாநில ஆளுநர் கே. டேவிட் கூறி உள்ளார்.

மின் விநியோகத்தைச் சீர் செய்வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் மாநிலத்தில் மின் விநியோகம் சீராவதற்குக் குறைந்தது 10நாள்களாவது செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ம—6]

# எத்தகைய நெருக்கடி வந்தாலும் பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்கப் போவதில்லை!

## தலிபான்கள் அறிவிப்பு

காபூல், ஜன. 20

எத்தகைய நெருக்குதல்கள் வந்தாலும் ஒஸாமா பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்போவதில்லை என்று ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் இயக்கம் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மீதான ஐ. நாவின் மேலும் சில கடுமையான தடைகள் நேற்று அமுலுக்கு வந்தன. இதனை முன்னிட்டு தலிபான் அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்லேடன் விடயத்தில் தீர்வு காண்பதற்கு இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்த தலிபான் ஆட்சியாளர்கள் தயாராக இருப்பதாக பாகிஸ்தானுக்கான தலிபான் தூதர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை —

ஆப்கானிஸ்தானின் இந்த அறிவிப்பு அதன் மீதான ஐ நாவின் தடைகளை மேலும் இறுக்கவே வழி செய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்லேடனை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா தீவிரமாக இருந்து வருகின்றது. எனவே ஐ.நா. மூலமாகத் தடைகளை மேலும் மேலும் இறுக்கி தலிபான்களைப் பணிய வைப்பதில் அமெரிக்கா தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. (ம-6)

# இந்தோனேசிய கலவரத்தில் 6 பேர் பலி!

ஜகார்த்தா, ஜன. 20

இந்தோனேசியாவின் அக்சே மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

அரசுப் படைகளுக்கும், இப்பகுதியில் பிரிவினை கோரி போராடிவரும் தீவிரவாதிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஏற்பட்ட இரு நாள்களுக்குள் இந்தக் கலவரம் மூண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மலேசியாவில் பெண்களுக்கு தனி அமைச்சு

கோலாலம்பூர், ஜன. 20

மலேசியாவில் பெண்களின் நலன்களைக் கவனிக்க தனி அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.

அம்னா கட்சியின் பெண்கள் பிரிவுத் துணைத் தலைவி ஷாலிசா அப்துல் ஜலீல் பெண்கள் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகதீர் மொகமட் அறிவித்துள்ளார்.

# கிளின்ரன் பிரியாவிடை; புஷ் பதவியேற்கிறார்!

வாஷிங்ரன், ஜன. 20

தனது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைவதை அடுத்து அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இன்று தனது பதவியில் இருந்து விலகிச் செல்கிறார்.

அமெரிக்காவின் 49 ஆவது புதிய அதிபராக ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் இன்று உத்தியோக பூர்வமாக தனது பதவியைப் பொறுப்பேற்க உள்ளார்.

மிக நீண்டகாலம் நீடித்த சட்ட மோதல்களின்பின் கடந்த டிசெம்பரி அதில் பராகத் தெரிவு செய்யப்பட்ட ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பதவி விலகிச் செல்லும் கிளின்ரனிடம் இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் வைபவம் இன்று வெள்ளை மாளிகையில் நடைபெற இருக்கிறது.

உலக விவகாரங்களில் அமெரிக்கா அதன் தலைமைத்துவப் போக்கைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று அதிபர் பில் கிளின்ரன் தனது பிரியாவிடைச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

வெள்ளை மாளிகையின் 'ஓவல்' மண்டபத்தில் இருந்து கிளின்ரன் ஆற்றிய பிரியாவிடை உரை மிகவும் உணர்வுபூர்வமாக அமைந்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கிளின்ரன் தனது பதவிக்காலத்தில் அமெரிக்காவுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியிருக்கிறார். எனினும் மத்திய கிழக்கு விவகாரம் போன்ற சில சிக்கலான உலக விவகாரங்களின் தீர்வுக்கான முயற்சிகளில் அவரது பங்கு பணி வெற்றியீட்டவில்லை. இதைவிட வெள்ளை மாளிகை உதவியாளக் மொனிக்கா லுவின்ஸியுடன் கொண்டிருந்த பாலியல் தொடர்பு விவகாரம் அமெரிக்க மர்கள் முன் அவரை மன்னிப்புக்கோர வைத்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-ம)



பதவி விலகிச் செல்லும் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் தனது மனைவி கிலாரி மற்றும் மகள் செல்சியா ஆகியோருடன் மகிழ்ச்சியாகக் காணப்படுகின்றார். (ம)

# உறவுகளை மேம்படுத்தத் திட்டம்

டாக்கா, ஜன. 20

பங்களாதேஷுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்காக இணைந்த குழு ஒன்றை உருவாக்குவதற்கு இரு நாடுகளும் இணங்கி உள்ளன.

இந்தியநிலப்பரப்பு ஊடாக நடத்தப்படும் வர்த்த நடவடிக்கைகளே இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியில் பெரும் முட்டுக்கட்டையாகும் என்று இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

இத்த இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் போக்குவரத்துகளும் இந்திய எல்லையில் உள்ள நிலப் பரப்புகளூடாகவே நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

## உலக அரங்கில்

# பலஸ்டிக் ரக ஏவுகணை முற்றாக இந்தியாவின் தயாரிப்பு: 'அக்னி - 2' சோதனை வெற்றி

புதுடில்லி, ஜன. 20

முற்றுமுழுதாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'பலஸ்டிக்' ரக ஏவுகணையான அக்னி - 2 வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரிசா மாநிலம், சாந்திப்பூரில் தற்காலிகச்சோதனைத் தளத்தில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது

தரையிலிருந்து 2 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தரை இலக்கொன்றை அக்னி - 2 ஏவுகணை திட்டமிட்டபடி தாக்கியதாகவும்—

அணுஆயுதத்தை ஏந்திச் செல்லக்கூடிய இத்தகைய ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்டது இதுவே முதல்முறை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஏவுகணைச் சோதனையின் போது நேரில் சமுகமளித்த பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஏவுகணைத் தயாரிப்பில் ஈடுபட்ட விஞ்ஞானிகளைப் பாராட்டினார்.

பாகிஸ்தானுக்கும், ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் இந்தச் சோதனை குறித்து முன்னரேயே தெரியப்படுத்தப்பட்டதாகஅமைச்சர் கூறினார்.

நடைமுறையில் உள்ள சர்வதேச வழக்க விதிபடி, வானூர்தியாளர்கள் மற்றும் கடல் வழிப்பயணிகளுக்கு "மோட்டம்" எனப்படும் விளம்பர அறிக்கை மூலம் ஏவுகணைச்சோதனை நடைபெறவிருந்தது அறிவுறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பலஸ்டிக் ரக ஏவுகணைச் சோதனையில் இந்தியா இரண்டாவது தடவை வெற்றியடைந்திருப்பதுகுறிப்பிடத்தக்கது. [ஓ—6]

# இந்திய ஏவுகணைப் பரிசோதனை குறித்து சீனா கவலை தெரிவிப்பு

பெய்ஜிங், ஜன. 20

இந்தியா உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்ட தனது 'அக்கினி-2' ஏவுகணையைச் சோதித்திருப்பது குறித்து சீனா கவலை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஏவுகணைச் சோதனைகளைச் சீனா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இந்தியாவின் ஏவுகணைத் தொழில் நுட்ப வளர்ச்சி தெற்காசியாவில் ஆயுதப் போட்டியை ஏற்படுத்தும் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

அதேசமயம் தெற்காசியாவில் அணு ஆயுதப் போட்டியை இந்தியாவும் பாகிஸ்தானும் உருவாக்கக்கூடாது என்றும் சீனா கோரி உள்ளது.

சீன அதிபர் லீபெங் இந்தியாவில் தனது 9 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு புறப்பட்ட சில மணி நேரங்களில் இந்தியா தனது 'அக்கினி-2' ஏவுகணையைச் சோதித்தது குறிப்பிடத்தக்கது. ( ம — 6 )

# சகாவின்சடலத்துடன் கைதுசெய்யப்பட்ட ஈழத் தமிழரது புகலிட கோரிக்கை கஸகஸ்தான் அரசால் நிராகரிப்பு!

பனிக் குளிரைத் தாங்க முடியாமல் உயிரிழந்த தமது சகாவின் சடலத்துடன் அலைந்து திரிந்த சமயம் கைது செய்யப்பட்ட 24இலங்கைத் தமிழர்களது அகதி அந்தஸ்து விண்ணப்பங்களை கஸகஸ்தான் அரசு நிராகரித்து விட்டது.

இவர்கள் அனைவரையும் அரசியல் தஞ்சம் கோரும் அகதிகளாக அல்லாது பொருளாதார அடிப்படையிலான சட்டவிரோதக் குடியேறிகளாகவே கஸகஸ்தான் அரசு கருதுகின்றது. இதனாலேயே அவர்களது அகதி அந்தஸ்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இவர்கள் தொடர்பான வழக்குகள் சர்வதேச புலம்பெயர் அமைப்பிடம் முறையிடப்பட்டு அவர்களது தீர்ப்பின்படியே இவர்கள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (ம-6)

# கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அதிபர் கபிலா உயிரிழந்ததாக அதிகார பூர்வமாக அறிவிப்பு

கொங்கோ ஜனநாயகக் குடியரசு அதிபர் லோறன்ஸ் கபிலா உயிரிழந்து விட்டதாக அந்நாட்டு அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அரச தொலைக்காட்சியில் இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் மாலை விடுக்கப்பட்டது.

அதிபர் உயிரிழந்துவிட்டாலும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் நிலைமைகள் ஸ்திரமாக இருப்பதாகவும்—

மக்கள் குழப்பமடையாது அமைதியாக இருக்க வேண்டும் என்றும் அரச செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அதிபர் கபிலா சுடப்பட்ட பின்னர் அவரது உயிரிழப்பு குறித்து வெளியான முரண்பட்ட தகவல்கள் இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளன.

தற்போது கின்ஸாசா அதிகாரங்கள் அனைத்தும் அதிபர் கபிலாவின் மகன் மேஜர் ஜெனரல் ஜோசப் கபிலாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ம-6)

# 'மைற்ஸ்' நோய்த் தாக்கத்தால் தேங்காய் உற்பத்தி பெருவீழ்ச்சி

வலிகாமம் தெற்கு, ஜன 20

யாழ். குடாநாட்டில தற்போது ஏற்பட்டுள்ள தேங்காய் விலை ஏற்றத்துக்கும், உற்பத்தி வீழ்ச்சிக்கும் அடிப்படைக்காரணம் மைற்ஸ் (Mites) நோய்த்தாக்கமாகும். சிற்றுண்ணித் தாக்கம் என அழைக்கப்படும் இந்நோயினால் குடாநாட்டில் உள்ள 75 சதவீதமான தென்னை மரங்கள் பாதிப்படைந்துள்ளதாக யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர் மத்தியில் தென்னைப் பயிர்ச்செய்கை பற்றி அவர் உரையாற்றினார்.

அதிபர் க. செல்வகுமாரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சத்தியேந்திரா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வெகு வேகமாகக் காற்றால் பரவும் இந்நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் தென்னை வளத்தில் பாரிய இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

குடாநாட்டில் பிரதானமாக கரையோரப் பிரதேசங்களிலும், நாவாந்துறை, அராலி மற்றும் தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி போன்ற இடங்களிலும் 75 சதவீதம் இந்நோய் பரவியுள்ளது.

இந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உள்ளிக்கரைசலை (20 கிறாம் உள்ளி, 5கிறாம் சவர்க்காரம், 20 மில்லி லீற்றர் வேப்பெண்ணெய், 1000 மி. லி. நீர் கலந்து) குரும்பையின் மூள் பகுதியின் மீது தெளித்தல் வேண்டும். அல்லது, ஒரு லீற்றர் நீரில் 5 கிறாம் சல்பரைக்கலந்தும்தெளிக்கலாம்.

சிற்றுண்ணித் தாக்கத்தின் அறிகுறியாக தேங்காயின் மேற்பரப்பில் கறாவல் தன்மை காணப்படும் குரும்பைகள் உதிர்ந்து விழும்.

இது பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்பு கொண்டால் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும்— என்று அவர் தெரிவித்தார். (ஐ-152)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி, ஜன. 20

பளைப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் பிரதேச சமூக சேவைகள் பிரிவினால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இக் கொடுப்பனவுகளை ஜனவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-117)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராசாவின் தோட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் ப. செல்வராசா கேட்டுள்ளார். (உ-5)

## வீதி புனரமைப்பு

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோயிலின் வீதி அகலமாக்கப்பட்டு தார் ஊற்றப்பட்டு புனரமைக்கப்படவிருக்கின்றது.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் இந்தப் புனரமைப்பு பணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ 3)

## உள்ளூராட்சி ஓய்வூதியக் கொடுப்பனவு

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் டிசம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அந்தந்த வங்கிகளில் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் கடந்த வாரம் வந்து சேர்ந்தபோதிலும் இதற்கான கொடுப்பனவுக் காசோலைகள் நேற்று முன்தினமே வங்கிகளுக்குக் கிடைத்துள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள வங்கிகளுக்குக் கிடைத்த ஓய்வூதியக் காசோலைகளும் அட்டவணைகளும் நனைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி, கொடிகாமம் தபால் நிலையங்களுக்கு யாழ். பிரதம தபால் நிலையத்தினால் அனுப்பப்பட்ட பதிவுத் தபால்கள் அடங்கிய பொதிகள் நனைந்த நிலையில் வந்துசேர்ந்தமை குறிப்பிடத்தக்கது. [உ-117]

## பாத்தீனியத்தை அழிக்க நிதி ஒதுக்கீடு

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பெருகி வரும் பாத்தீனியத்தை முற்றாக ஒழிப்பதற்காக சுமார் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உடுவில், கோப்பாய் பகுதியிலேயே அதிகளவு பாத்தீனியம் பரவி வருவதாக விவசாயத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பரவி வரும் பாத்தீனியத்தை முற்றாக அழித்தொழிக்கும் செயல்பாட்டிற்கு இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

# சேர் பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் சிவாச்சார்ய குருகுலம்

புதிய மாணவர்கள், வெளிமாணவர்கள் ஆகியோரின் அனுமதிகளுக்கான

விண்ணப்ப முடிவு திகதி: 31-01-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களையும், பாடவிதானத்தினையும் ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், யாழ். பல்கலைக் கழகம், நல்லூர் சிவன்கோயில் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

- இணைப்பாளர்.

(83160)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

10-01-2001 அன்று சிவபதமடைந்த பிரபல கல்விமான்

**பிரம்மஸ்ரீ ந. கந்தசாமி ஐயர்**

(இளைப்பாறிய அதிபர், கோண்டாவில்)

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

- நியந்த்ரி.

(83159)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 18 — 01 — 1944



உதிர்வு: 10 — 01 — 1999

பல்கலை வேந்தன், மிருதங்கச் சக்கரவர்த்தி

**யோன்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை**

இவரின் பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்.

24, சென்: செபஸ்ரியன் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம். (83164)

## உடுவில் பிரதேச செயலர் பிரிவில்; ரூ. 1 கோடி 50 லட்சம செலவில் பழம் பதனிடும் தொழிற்சாலை

யாழ்ப்பாணம். ஜன. 20

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபா செலவில் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை ஒன்று பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான உபகரணங்கள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கனவே சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்படவிருந்த பழம் பதனிடும் தொழிற்சாலைக்கென கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களும் இத் தொழிற்சாலைக்கு வழங்கப்படவுள்ளன.

இம்மாத இறுதிப் பகுதியில் இத்தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை சுன்னாகத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 20

போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று பளை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் சுன்னாகத்தில் திறக்கப்படவுள்ளது.

சுன்னாகம் ப. தெ. வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட இருக்கும் இந்த தொழிற்சாலைக்குரிய உபகரணங்கள் பளை அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படவுள்ளன.

இந்தத் தொழிற்சாலை செயற்படத் தொடங்கியதும் இங்கு போத்தலில் அடைக்கப்படும் கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## விமானக் குண்டு வீச்சில் சேதமுற்ற குருநகர் யாகப்பர் ஆலயத்தை திருத்த உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 20

1993 ஆம் ஆண்டு விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தைப் புனரமைக்க நிதி வழங்குமாறு மேற்படி ஆலய புனரமைப்புச்சபை வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கோரியுள்ளது.

அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த ஆலயத்தைப் புனரமைக்கவென கட்டட நிர்மாணத் திணைக்களத்தால் 97 லட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பலதடவைகள் தொடர்பு கொண்டோம்.

யாழ். ஆயர் மேதகு சௌந்தரநாயகம் மூலமும், யாழ்.பங்குத் தந்தை ஊடாக புனரமைப்புச் சபை மூலமும் பல கடிதங்கள் எழுதியுள்ளோம்.

ஆனால் இதுவரையில் பலாலியில் கடமையாற்றிய முன்னாள் படைத் தளபதி மூலம் 10 லட்சம் ரூபாவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. சூகேந்திரன் மூலம் வருடாந்த ஒதுக்கீட்டு நிதியில் இருந்து மூன்றரை லட்சம் ரூபாவும் மட்டுமே கிடைத்துள்ளன.

ஆலயப் புனரமைப்பைப் பூர்த்தி செய்ய இன்னமும் 35 லட்சம் ரூபா தேவையாக உள்ளது. இது விடயமாக ஏற்கனவே தங்களுடன் கலந்துரையாடியுள்ளோம். இந்த நிதியை ஒதுக்கித் தருமாறு கோருகின்றோம் — என்றுள்ளது. (உ-3-10-51)

## சங்கத்தில் திருட்டு

அரியாலை, ஜன. 20

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆனைக்கோட்டை — ஆறுகால்மடம் பகுதியில் அமைந்துள்ள கிளை ஒன்று நேற்று முன்தினமிரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

சங்கத்தின் 14ஆம் இலக்கக் கிளையே இவ்வாறு உடைக்கப்பட்டுப் பல ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-17-139]

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இங்கு வருவர்

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளின் தற்போதைய நிலைமை குறித்து நேரில் கண்டறிவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்கள் ஐந்து பேர் அடங்கிய குழுவொன்று அடுத்த மாத நடுப்பகுதியில் கொழும்பு வரவுள்ளது.

இந்தக் குழுவினர் இலங்கையின் இனப் பிரச்சினையுடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இலிகா உசித்தாலே நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்தார்.

பதினொரு தமிழ் அரசியல் தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதியை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான விடயத்தில் நோர்வேயின் செயற்பாடுகளில் ஐரோப்பிய ஒன்றியம் தனது முழுமையான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றது எனவும் இலிகா உசித்தாலே தெரிவித்துள்ளார். (உ-7)

## விடுவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நயினாதீவு இளைஞர் ஒருவர் மேற்படி நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

சண்முகநாதன் ஜெகந்தன் என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் கீழ் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா இவரை விடுதலை செய்தார். (உ-6-6)

## காயமடைந்த படையினருக்கு

# இரத்ததானம் செய்ய மக்களிடம் கோரிக்கை

கொழும்பு,ஜன.20

'கினிகிர' இராணுவ நடவடிக்கையில் காயமடைந்த படையினருக்கு இரத்ததானம் வழங்கி உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கெதிரான தேசிய அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

நாட்டுக்காக உயிரைப் பணயம் வைத்து போராடி காயமடைந்த படையினருக்கு இரத்ததானம் வழங்குவது பொதுமக்களின் தேசிய பொறுப்பு எனவும்-

இதற்காக பொதுமக்கள் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அணி திரள வேண்டும் எனவும்-

பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பின் அமைப்பாளர் விமலசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-7)

### பல்கலைக்கழக ஊழியருக்கு நிலுவை

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 97 ஆம்,98ஆம் ஆண்டுக்கான சம்பள நிலுவைகளை வழங்கும்படி பணிக்கும் சுற்றுநிருபத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபம் யாழ். பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்துள்ளது என்றும்-

இந்த மாதச் சம்பளத்துடன் இந்த நிலுவையை வழங்க பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும்-தெரிவிக்கப்பட்டது.

### அந்த நாயைத் தேடி வேட்டை!

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ். நகரப் பகுதியில் 17 பேரைக கடித்த பின்னர் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் விசர்நாயைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் யாழ். மாநகர ஊழியர்கள் நேற்று ஈடுபட்டனர்.

அந்த நாய் 512 ஆவது பிரிகேட் அலுவலகப் பகுதிக்குள் சென்றுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்று நாயைப் பிடிக்க ஊழியர்கள் முயற்சி மேற்கொண்டதாகவும் -

படையினர் அனுமதி வழங்காததால் அங்கு செல்ல முடியவில்லை என்றும் -

நாய் பிடித்தழிக்கும் பணிக்குப் பொறுப்பான ஊழியர்ஒருவர் தெரிவித்தார்.

யாழ்மாநகர ஆணையாளர் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து பிரிகேட் பகுதியில் நாயைத் தேடும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

இன்று அங்கு தேடும் பணி இடம்பெறும் என்றும்- அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

### வாசுவின் பாதுகாப்பு வாபஸ்

கொழும்பு, ஜன.20

இரத்தினபுரி மாவட்ட முன்னாள் எம்.பி. வாசுதேவ நாணயக்காரவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலீஸ் பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

வாசுதேவ நாணயக்கார தொடர்ந்தும் எம்.பி.யாக இல்லாத காரணத்தினாலும், பாதுகாப்புக் கடமைகளுக்கு அதிக எண்ணிக்கையான பொலீஸார் தேவைப்படுவதனாலும் தொடர்ந்தும் பொலீஸ் பாதுகாப்பை வழங்கமுடியாதுள்ளது என பொலீஸ் திணைக்களம அறிவித்துள்ளது.

பெரிய அச்சுறுத்தலகள் உள்ள அரசியல் தலைவர்களுக்கே தற்போது பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த திருடர்கள் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும வானொலிப்பெட்டி போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இந்த வீட்டின் உரிமையாளரான க.சோமசுந்தரம் யாழ்.பொலீஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டினை தொடர்ந்து திருட்டுப்போன வீட்டுக்கு நேற்று நேரில் சென்று பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (உ-5)


## மலிவு விலையில்

## உயர்தரமான கணனிகள், உதிரிப்பாகங்கள்

MONITOR, KEY BOARD, SPEAKERS, C.D.S, MOUSE, FLOPPY DISKETS, DUST COVER, PRINTER, SCANNER, U.P.S., CARTRIDGES, MODEM, RIBBONS

இன்னும் பல உதிரிப்பாகங்கள்

மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

COMPUTER TYPING, PRINTING, E.MAIL,FAX

வசதிகள் யாவற்றையும் ஒரே இடத்தில்

குறைந்த செலவில்

செய்து கொள்ள

நாடுங்கள்

**SRI MURUGAN COMPUTER SYSTEMS**

303, K.K.S. ROAD, JAFFNA.

T.P. :2670,3588, FAX :3214

E.MAIL :- DEL SMSKR @ eureka lk

SMS COMJA @ Slt Net. lk

(C/14906)



## இன்னிசை கானங்கள்

கோட்டைக்காடு மல்லாகம்

சிறீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் ராகம்ஸ் இசைக் குழுவினர் வழங்கும்

இன்னிசை கானங்கள்

இடம் : குழந்தைவேல் கலையரங்கம்

காலம் : நாளை (21-01-2001) பிற்பகல் 2.00மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:

ராகம்ஸ் பட்டுச் சோலை

27, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(C/14909)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்

## அறிவித்தல்

### பொதுக் கலைத்தேர்வு - பகுதி-I -1999

17.01.2001 அன்று நடைபெறத் தவறிய கீழ்க்காணும் பாடங்கள் 01.02.2001 அன்று நடைபெறும்.

9.30 - 12.30 வர்த்தக கைத்தொழில் சட்டம் **EX.COM 2.2**

1.00 - 4.00 பேரினப் பொருளியல் **EX.ECN 2.2**

பதிவாளர்.

18.01.2001

(C/14908)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்

முதற்கலைத் தேர்வு -1999

வணிகமாணி பகுதி II-1999

சிறப்புக்கலைத் தேர்வு பகுதி III -1998

மேற்படி பரீட்சைகள் 02-02-2001 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

★ முதல் வணிகத் தேர்வு - 1999 இல் அடிப்படைக் கணிதத்தை (EX.BM 1.0) துணைப்பாடமாக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் மேற்படி பாடத்திற்குத் தோற்றுமாறு கோரப்படுகின்றனர்.

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையையும் நேரசூசியையும் 26.01.2001ஆம் திகதி தொடக்கம் வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

மேற்படி பரீட்சைகள் வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.

பதிவாளர்.

(C/14907) 18-01-2001

## நன்றி பகிர்கின்றோம்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் காணாமல்போன குடும்பத்தினரது சிறார்களின் துயர்துடைப்புக்காக 14-01-2001 ஆம் திகதி அச்சுவேலி ம.வி.யில் நடைபெற்ற "கலைக்குயில் கானங்கள்" இசை நிகழ்விற்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள், வாகன உரிமையாளர்கள், இசைக்கலைஞர்கள் யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,

யாழ்.பல்கலைக்கழகம்.

(83163)


## லாலா அதிர்ஷ்டம் அழைக்கின்றது

"லாலா" சோப் நிறுவனம் பாவனையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்கும்

*அதிர்ஷ்டங்கள்*

1 ஆம் பரிசு - 2 பவுண் தங்க நாணயம்

2 ஆம் பரிசு - 1 பவுண் தங்க நாணயம்

3 ஆம் பரிசு - 1/2 பவுண் தங்க நாணயம்

இது மட்டுமா?

ரூபா 1000/= மதிப்புக்குட்பட்ட 6 சேலைகள்!

நீங்கள் செய்ய வேண்டியது -

விற்பனையாகும் அதிர்ஷ்ட லாபச் சீட்டு ஒன்றினை வாங்கிக் கவனமாக வைத்திருங்கள்.

☛ போட்டி முடிவுகள் தினசரிகளிலும் வானொலியிலும் அறிவிக்கப்படும் .

*"லாலா" பாவனையாளர்களே!*

*அரிய சந்தர்ப்பம் !!*

(C/14905)


## இதய அஞ்சலி

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினூடாகவும் தனியாகவும் வான் அவதானிப்பு தொடர்பான அறிவையும் அனுபவத்தையும் விருப்புடன் வழங்கி எம்மை இத்துறையில் திறமை வாய்ந்த ஆசான்கள் ஆக்கிய

கோண்டாவில்

### பிரம்மஸ்ரீ ந.கந்தசாமி ஐயர்

அவர்களின் தசாகக் கிரியைத் தினத்தில் எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

ஆசிரியர், மாணவர்களுக்கான வானியற் பாசறை அமைப்பு நண்பர்கள்.

(83165)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பா நடராசா

(இளைப்பாறிய நிதி முகாமையாளர், துறைமுக அதிகார சபை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் 48/1, தர்மராமா வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா நடராசா 19.01.2001 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பதிகளின் அன்புப் பெறாமகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சத்தியவதியின் அன்புக் கணவரும், கல்யாணி, முரளிதரன், கிரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இளங்கோ, ஜெயமலர் ஆகியோரின் அன்பு மாமனும் வைதேகி, மயூரன், கிருசாந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 48/1, தர்மராமா வீதி, வெள்ளவத்தை இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (20.01.2001) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் கிருலப்பனை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

*48/1, தர்மராமா வீதி,*
*கொழும்பு - 6*
***Tel: No - 586840***

தகவல்:
ந.முரளி (மகன்)

(C/14912)

### திருமதி பிள்ளையம்மா திருநாவுக்கரசு

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பிள்ளையம்மா திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (19.01.2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் க.திருநாவுக்கரசு அவர்களின் மனைவியாரும், சமதர்மபாலன் (ஆசிரியர், யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை) அவர்களின் தாயாரும், திருமதி சமதர்மபாலன் சசிகலா அவர்களின் மாமியாரும் சஜீவ், பிரகாஷ் (யா/ஹாட்லிக் கல்லூரி), சிந்துஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), நிருஜா, துர்க்கா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2001) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.சமதர்மபாலன் (மகன்),
க.தனபாலசிங்கம் (மருமகன்)
(அமைப்பாளர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.)

*ஸ்ரீலங்கா பாடசாலை வீதி,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

(C/14913)

## யாழ்ப்பாணத்தில் கைதான பின் களுத்துறையில் காவலில் உள்ள 11 பேருக்கு விரைவில் விடுதலை

கொழும்பு,ஜன.20

யாழ்ப்பாணத்தில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பதினொரு தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

சின்னையா அற்புதராசா, இராசரத்தினம் பஞ்சலிங்கம், சிவராசா சுதர்சன், சிறில் ஷெல்டன் நிரோஷ், குணரட்ணம் குணசீலன், முத்துலிங்கம் ஜெயானந்தன், பொன்னன் உதயகுமார், சிவலிங்கம் கமலேஸ்வரன், தேவநாயகம் றொனால்ட், சின்னத்துரை இந்திரக்குமார், கார்த்திகேசு கலைரூபன் ஆகியோரை விடுதலை செய்வதற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி பதினொரு பேரையும் யாழ்ப்பாணம் கொண்டு சென்று நீதிமன்றில் ஆஜர் செய்து விடுவிக்குமாறு சட்டவிரோதக் கைதுகள் துன்புறுத்தலுக்கான ஜனாதிபதி ஆலோசனைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (உ-7)

## சந்திர மௌலீச வித்தியாலய மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஜன.20

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்பொழுது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களையும் தமது பெயர் விவரங்களை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் பதிவு செய்யுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

இலவச பாடநூல்கள் மற்றும் இலவச சீருடை விநியோகத்துக்கு மேற்படி விவரங்கள் தேவைப்படுவதனால் உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

## தப்பியோடிய 36 படையினர் கைதாம்

கொழும்பு,ஜன.20

இராணுவத்திலிருந்து தப்பியோடி தலைமறைவாக வாழ்ந்து வந்த 34 படையினரையும் 2 கடற்படைச் சிப்பாய்களையும் தாம் கைது செய்துள்ளதாக பொலீஸ் தரப்பு அறிவித்துள்ளது.

நிக்கரவெட்டிய பகுதியில் வைத்தே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (3-7)

## மாணவன் உட்பட ஐவர் கைது

வத்தளை சம்பத் வங்கியில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கணனி டிப்ளோமா மாணவன் ஒருவன் உட்பட 5 பேர் பேலியகொட பொலீஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். (3-7)

## மட்டக்களப்பில்....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கம் தயாராக உள்ளது. சமாதானத்துக்காக அரசுக்கு ஆதரவு வழங்குங்கள்; படையில் இணைந்து கொள்ளுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் இவ்வாறு ஹர்த்தாலுக்குத் தடை விதித்துள்ள போதும் அது திட்டமிட்டபடி நடக்கும் என மாணவர் முன்னணி அறிவித்திருப்பதாக நேற்றிரவு கிடைத்த மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-3-7-21)

## 3,500 பேரை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

களை பிரமாணாளங்குளம் சோதனை நிலையத்தில் சோதனை செய்வதில் சிக்கல்கள் உள்ளதாகப் படைத்தரப்பு தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து வவுனியா செயலகத்தில் வைத்துப் பயணிகளைச் சோதனை செய்து பஸ்களில ஏற்றி அனுப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (உ-3-164)

# அரசுக்கு எதிராக ஐ.தே.க. தொடர் போராட்டங்கள்!

## அடுத்த மாதம் முதல் நடக்குமாம்

சிங்கப்பூர்,ஜன.20

இலங்கை அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான தவறான கொள்கைகள் போன்றவற்றுக்கு எதிராக அடுத்த மாதம் முதல் தொடர்போராட்டங்கள் நடத்தத் தாங்கள் திட்டமிட்டுள்ளதாக ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெறும் ஆசிய-பசுபிக் ஜனநாயக இளைஞர் சம்மேளன மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்தச் சம்மேளனத் தலைவர் டானியல் விலோடி தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் பேசுகையில் அவர் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அரசின் ஜனநாயக விரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.நீதியான தேர்தல்கள் இடம்பெறுவதில்லை. பொருளாதாரச் சுமை அதிகரித்துள்ளது.

இதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கத்தவறிவிட்டது.

அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து நாடு முழுவதும் தொடர் போராட்டங்களை அடுத்த மாதம் முதல் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (உ-3)

## செம்மணி...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபருடன் சென்ற குழுவில் உரும்பிராய், இணுவில், கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்த ஐவர் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் அந்தப் பகுதி கிராமசேவையாளர் மூலமாக யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிவலிங்கம் உதயகுமார்(வயது-20),சிவலிங்கம் ஜெயக்குமார்(வயது-18),இரத்தினம் சிவனேந்திரன்(வயது-28),இராமமூர்த்தி ஜெயக்குமார்(வயது-28),கதிரமலைநாதன் ஜெயக்குமார் (வயது-27) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.(உ-3-5-15-17-86)

## பேச்சுக்கான....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

"விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வமாக உள்ளது. இந்த விடயத்தில் முரண்பாடான அபிப்பிராயங்கள் எதுவும் இல்லை. சமாதானப் பேச்சுக்களின் அம்சங்கள் எந்த அடிப்படையில் அமையவேண்டும் என்ற நிரலைப் புலிகள் இயக்கம் அனுப்ப வேண்டும்" என்று ஜனாதிபதி அங்கு கூறினார்.

சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் விடயத்தில் அடுத்த வாரமளவில் சில முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படக்கூடும் என அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

பொ.ஐ.முன்னணியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. (உ-3)


வெளிவந்துவிட்டது

அட்சரகணிதம்-1
ALGEBRA
For A/L Students

பதிப்பாசிரியர்கள்
Mr.P.Makinan B.Sc(Hons), M.Sc
Dr.S.Srisatkunarajah B.Sc(Hons), Ph.D
-யாழ் பல்கலைக்கழகம்
வெளியீடு - யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

ஏக விநியோகஸ்தர்கள்
மண்டேலா புத்தக நிலையம்
இல 2,பஸ் நிலையம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

விலை: ரூபா180 மட்டும்



வாடிக்கையாளருக்கு
ஒரு நற்செய்தி
மீண்டும் ஆரம்பம்
யூனியன்
சேவிஸ் ஸ்ரேசன்
(83014) இருபாலைச் சந்தி.



சுடர் ஒளி
ஜனவரி 21, 2001 இதழ்
சொல்ஹெய்ம் ஊடாக
அரசுக்கு புலிகள் அறிவித்த
அதிரடிப் பதிலடி!
*
பல்கலைகளில் பொங்கு தமிழ்
உணர்ச்சிப் பேரலை
மலையகத்தில்
இன ஒழிப்பு
*
புலிகளைப் பொறிக்குள் தள்ளும் ஆனையிறவுப் படைநகர்வு



மற்றும் வழமையான... • சினிமா
• மசாலா மிக்ஸ் • பெண்கள் பகுதி
• விளையாட்டு • பித்தன் பதில்கள்



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
விமானம் மூலம்
பொதிகள் அனுப்பும்
வசதி

CITY TRANSPORT SERVICE

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம்
பொதிகளை அனுப்பும் வசதி
உடனுக்குடன் செய்து தரப்படும்
இன்றே வாடிக்கையாளர்களாக மாறுங்கள்.

உங்கள் தேவையே எங்களின் சேவை

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

யாழ்ப்பாணம்
535A, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
T.P:3453
78, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:2671

கொழும்பு
309, 1/1, காலி வீதி,
வெள்ளவத்தை.
T.P:077-780836

(சி)14901



லீலா 2001
✪ லீலா தினக் கலண்டர்கள்
✪ லீலா மாதக் கலண்டர்கள்
✪ லீலா டயறிகள்
கொழும்பு விலைக்கே விற்பனையாகின்றன.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/14904)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை முத்தாபரணம்

ஆனைக்கோட்டை சிவன்கோயிலடியைச் சேர்ந்த செல்லத்துரை முத்தாபரணம் நேற்று (19.01.2001) காலமானார்.

தகவல்:

நவாலி வடக்கு. திருமதி கந்தையா அழகரத்தினம் (சகோதரி)

(C/14914)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.